Registered as a Newspaper

பக்கங்கள் 24+4

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 204

ஞாயிற்றுக்கிழமை 18 ஜுன் 2023

ஆனி 03 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



வடக்கு - கிழக்கில் பௌத்தர்களுக்கு தீர்வின்றேல்

# சிங்களமக்களின் எழுச்சியை எவராலும் தடுக்கவேமுடியாது!

## சரத் வீரசேகர எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 18**

**குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட வடக்கில் பௌத்த - சிங்களவர்களுக்கு எதிராகத் திரும்பியுள்ள அத்தனை விடயங்களுக்கும் ஜனாதிபதி விரைந்து தீர்வு காணவேண்டும். இல்லையேல் பௌத்த - சிங்கள மக்களின் பேரெழுச்சியை எவராலும் கட்டுப்படுத்த முடியாது - இவ்வாறு கடற்படையின் முன்னாள் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.** >>23

## டொலர் ஏறுமுகம்: பொருள்களின் விலையும் அதிகரிப்பு

கொழும்பு, ஜுன் 18
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், சந்தையில் பொருள் >>02

## தமிழ்த் தேசிய கூட்டணியின் கூட்டம் இன்று

யாழ்., ஜுன் 18
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் (டி.ரி.என்.ஏ.) முக்கியமான கூட்டம் வவுனியாவில் இன்று மு.ப. >>02

காதல் விவகாரம்;

## குடும்பத்தலைவர் வெட்டிச்சாய்ப்பு

மன்னாரில் நேற்றுக்காலை சோகம்
ஒருவர் கைது: 3 பேர் தலைமறைவு



மன்னார், ஜுன் 18
காதல் விவகாரம் காரணமாக மன்னார் - அச்சங்குளத்தில் இளம் குடும்பத் தலைவர் கும்பல் ஒன்றின் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். ஒரு குழந்தையின் தந்தையான ராதா >>23

## வடக்கு கல்விப் பணிப்பாளரால் எனக்கு உயிர் அச்சுறுத்தல்!!

வலயக் கல்விப் பணிப்பாளர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜுன் 18
வடமாகாண பதில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருஞானம் ஜோன் குயின்ரஸ் எனக்கு உயிரச்சுறுத்தலையும், அபகீர்த்தியையும் ஏற்படுத்தும் விதமாக செயற்படுகின்றார் என கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன், வடமாகாணக் கல்வியமைச்சின் செயலரிடம் முறைப்பாடு செய்துள்ளார். >>23



நயினாதீவு நாகபூஷணியில் நேற்று

சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் –

## மீனவர்களை எதற்காக மோதவிடுகிறீர்கள்?

நீரியல்வள அதிகாரிகளிடம் மீனவப் பிரதிநிதிகள் கேள்வி

யாழ்ப்பாணம், ஜுன் 18
சுருக்குவலை தொடர்பில் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனையும் மீறி வடமராட்சி கிழக்கில் சுருக்குவலைத் தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக வடமராட்சியிலிருந்து காங்கேசன்துறை வரையிலான மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். மீனவர்களிடையே பாகுபாடுகாட்டி மோத >>23

## 3 நாகங்கள் வழிபாடு: நாளை கோடியேற்றம்!

பக்தர்கள் மெய்சிலிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 18
வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு சிறி நாகபூஷணி அம்மன் ஆலய பெருந் திருவிழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் நேற்றுச் சனிக்கிழமை பகல் வேளையில் மேற்படி ஆலயச் சூழலில் மூன்று >>02

## கறுவாச் செய்கைக்கு முல்லை மண் சிறப்பு

முல்லைத்தீவு, ஜுன் 18
இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் கறுவாச் செய்கையை மேற்கொள்வதற்கு மிகச் சிறந்த மண் மற்றும் காலநிலை காணப்படுவதாக கறுவா ஆராய்ச்சி நிலையத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. >>24

## போதைவிற்ற பணத்தை வாங்குவதும் போதையை விற்பதும் ஒன்றுதானே?

டக்ளஸை நோக்கி ஐங்கரநேசன் கேள்வி

யாழ்ப்பாணம், ஜுன் 18
போதைப்பொருளை விற்றவர்களிடம் வாங்கும் காசு மாத்திரம் போதைப் பொருளுடன் தொடர்பற்றதா? - இவ்வாறு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் [illegible] >>23

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தனிச் சிங்களச் சட்டம்: தந்தை செய்தது தவறே!

## ஒப்புக்கொள்கிறார் சுனேத்ரா பண்டாரநாயக்க

**கொழும்பு, ஜூன் 18**

**எனது தந்தை கொண்டு வந்த தனிச் சிங்களச் சட்டத்தால் நாடு பெரும்பாதிப்பை எதிர்கொண்டது என்பதை ஏற்றுக்கொள்வதாக முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் மகள்களில் ஒருவரான சுனேத்திரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.**

அரசியல் கருத்துப்பரிமாறல் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டவேளை அவர் இதனைத் தெரிவித்துள்ளார். உங்களது தந்தை தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்காவிட்டால் நாடு தற்போது மிகவும் முன்னேற்றகரமான நிலையில் இருந்திருக்கும். இதனைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே சுனேத்திரா பண்டாரநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் இதனை எப்போதும் தெரிவித்திருக்கின்றேன். உண்மையைச் சொல்லியாகவேண்டும். ஆம், ஏன் அவர் தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தார்? அரசியல் சந்தர்ப்பவாதம் . அரசியல் ரீதியில் பிரபலமாவது உண்மையில் எனக்குத் தெரியாது. ஆனால், இந்த நபர் தெரிவிப்பது உண்மை. அது எனக்கு ஆழ்ந்த கவலையை அளிக்கின்றது - என சுனேத்திரா தெரிவித்துள்ளார். (அ-ஒ,இ)



# ரணில் மீண்டும் வெளிநாட்டுக்கு

கொழும்பு, ஜூன் 18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரான்ஸ் மற்றும் பிரிட்டனுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார். எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான ஈ.கே.-649 என்ற விமானத்தினூடாக நேற்று அதிகாலை ஜனாதிபதி நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

டுபாய்க்குச் சென்று அங்கிருந்து, மற்றொரு விமானத்தின் ஊடாக பிரிட்டன் நோக்கிப் பயணிக்கவுள்ளார். பிரான்ஸ் பயணத்தின்போது, புதிய பூகோள நிதியுதவி உடன்படிக்கைக்கான உலகளாவிய தலைவர்களின் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில் உரையாற்றவுள்ளார். (அ-ஒ,இ)

# பிக்குகள்தான் ரவுடிகள்

## செல்வம் எம்.பி. காட்டம்

வவுனியா, ஜூன் 18

புத்தருடைய போதனைகளை மறந்து ரவுடிகளாக இருப்பது எல்லாம் பிக்குகள்தான் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

'குருந்தூர்மலை விகாரைக்காக சுவீகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் 400 ஏக்கர் விவசாய நிலத்தை விடுவிக்க ஜனாதிபதி எமது கோரிக்கையை ஏற்று முடிவெடுத்தார். எங்கள் நிலத்தை விடுவிக்க ஜனாதிபதி உத்தரவிட்ட பின்னர் பிக்குகள் இதற்கு எதிராகப் பொங்குகின்றார்கள். மூலைக்கு மூலை விகாரை கட்ட முயல்கின்றார்கள். பிக்குகள்தான் எமது இனப்பிரச்சினையில் துவேசத்தை கக்குகின்றார்கள். புத்தர் அப்படிப் போதனையைச் செய்யவில்லை. ஆனால், இங்கு ரவுடித்தனம் செய்வதெல்லாம் பிக்குகள். குருந்தூர் காணி விடயத்தில் பிக்குகள் தலையிடக்கூடாது. ஜனாதிபதி உத்தரவிட்ட விடயம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்'- என்றார் செல்வம். (அ-ஒ,18)

### டொலர்...

களின் விலைகள் அதிகரித்துள்ளன.

இறக்குமதியாளர்கள் விலைகளை உயர்த்தியுள்ளதால் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். உருளைக் கிழங்கு, உப்பு மற்றும் பருப்பு ஆகியவற்றின் மொத்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கோதுமை மாவை இறக்குமதி செய்யும் போது அனுமதிப்பத்திரத்தைக் கட்டாயம் பெற வேண்டும் என நிதியமைச்சு வர்த்தமானி வெளியிட்டதையடுத்து சந்தையில் இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை 40 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

# சித்த மருத்துவ அலகு மருத்துவபீடமாக உயர்வு

கொழும்பு, ஜூன் 18

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் அமைந்துள்ள சித்த மருத்துவ அலகு சித்த மருத்துவபீடமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இந்த அறிவித்தல் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜெயந்தவால் கையொப்பமிடப்பட்டு, கடந்த 12 ஆம் திகதி, அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரகடனத்தின் படி, இதுவரை காலமும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் கீழ் இருந்த சித்த மருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது, அடிப்படைத் தத்துவம், குணபாடம், நோய் நாடல் மற்றும் சிகிச்சை ஆகிய மூன்று கற்றல் துறைகள் சித்த மருத்துவ பீடத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன. (அ-ஒ,இ)

### தமிழ்த்...

10 மணிக்கு நடைபெறவுள்ளது. அந்தக் கட்சியின் தலைமைத்துவம் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பில் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ,5)

### 3 நாகங்கள்...

நாகபாம்புகள் அருட் காட்சி கொடுத்தமை அடியவர்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தியது.

ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு துப்புரவுப் பணிகள் நேற்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டன. தேங்காய்கள் குவிக்கப்பட்டிருந்த குவியல் நீண்ட நாள்களின் பின்னர் நேற்றுத் துப்புரவு செய்யப்பட்டன. இதன்போது அங்கிருந்த 3 நாகபாம்புகள் வெளிவந்தன. அவற்றில் பெரிய நாகபாம்பு சில நிமிடங்களிலேயே அங்கிருந்து ஆலய வளாகம் ஊடாக வெளியேறி மறைந்துவிட்டது. ஏனைய இரண்டு நாகபாம்புகள் ஆலய வளாகத்தில் நீண்ட நேரம் நின்றிருந்தன. அவற்றைப் பக்தர்கள் பார்வையிட்டு பரவசமடைந்தனர். அவையும் பின்னர் அங்கிருந்து சென்றுள்ளன. (அ-ஒ,5,66)



# மருத்துவமனையின் அசமந்தத்தால் பறிபோனதா முதியவரின் உயிர்?

யாழ்ப்பாணம், ஜூன் 18

அச்சுவேலி பிரதேச மருத்துவமனையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட முதியவர் மருத்துவமனை நிர்வாகத்தின் அக்கறையீனம் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த குழந்தை கணேஷ் என்ற நபர் நெஞ்சுவலி காரணமாக அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.


அவரை அச்சுவேலியில் இருந்து அம்புலன்ஸில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லும் வழியில் கோப்பாய் பகுதியை அண்மித்த சமயத்திலேயே அவரது அனுமதிச் சீட்டை மருத்துவமனையிலேயே தவறவிட்ட விடயம் அதில் இருந்தவர்களுக்கு நினைவுக்கு வந்தது . இதனால் அம்புலன்ஸை கோப்பாயில் இருந்து திருப்பி, மீண்டும் அச்சுவேலி பிரதேச மருத்துவமனைக்குச் சென்று அனுமதிச் சீட்டை எடுத்த பின்னரே யாழ்.போதனா மருத்துவமனைக்கு நோயாளியைக் கொண்டு சென்றனர்.

உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நோயாளியை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் பொழுது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைச் சரிவரக் கடைப்பிடிக்காமை காரணமாக, நெஞ்சு வலியால் நோயாளி உயிரிழந்துள்ளாரென உறவினர்கள் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

இது தொடர்பில் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, இது தொடர்பாக நான் செய்தி மூலம் அறிந்தேன், சம்பவ நேரத்தில் கடமையிலிருந்த மருத்துவர் மற்றும் பணியிலிருந்த ஊழியர்களுடன் இதுவரை நான் பேசவில்லை. அவர்களிடம் முழுமையாக விசாரித்த பின்னரே என்னால் பதிலளிக்க முடியும் என்று தெரிவித்தார். (அ-ஒ,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மின்குமிழ்கள் பழுதடைவு: அச்சத்துடனேயே பயணம்

## வழுக்கையாறு மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபைக்குட்பட்ட வழுக்கையாற்றில் வீதி மின்குமிழ்கள் பழுதடைந்துள்ளதால் அச்சத்தின் மத்தியில் பாதுகாப்பற்ற பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொதுமக்கள் தெரிவித்ததாவது:

தேர்தலுக்காக உள்ளூராட்சிசபைகள் கலைக்கப்பட்ட நிலையில், பிரதேசசபை செயலாளர்களிடம் அதிகாரம் பாரப்படுத்தப்பட்டது. குறித்த பகுதியில் தற்போது வீதி மின்குமிழ்கள் பழுதடைந்துள்ளமை தொடர்பில் அதிகாரிகள் கவனத்திற்கொள்ளவில்லை. அதனால் இரவு வேளைகளில் ஒளியின்றி அச்சத்துடன் பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-ரி2-125)

# இறக்குமதிக் கட்டுப்பாடு மேலும் தளர வேண்டும்

## மிலிந்த மொரகொட தெரிவிப்பு

இலங்கை இந்த வருட இறுதிக்குள் தனது பொருளாதார நிலையை உறுதிப்படுத்துவதும், இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதும் அவசியம் என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மூன்று, நான்கு வருடங்களாக நாங்கள் வெளிநாடுகளில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்யவில்லை. பணவீக்கம் அதிகரிக்காத வகையில் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு மத்திய வங்கி முயல்கின்றது. எனினும் தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டதும் நாங்கள் புதியசவால்களை எதிர்கொள்வோம். கட்டுப்பாட்டுச் சூழலை இந்த வருட இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி வெட்டுக்காட்டில் தொடர் மணல் அகழ்வு!

## மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூன் 18

பூநகரி வெட்டுக்காடு பகுதிகளில் சட்டவிரோதமாக இரவு வேளைகளில் தொடர்ச்சியாக மணலகழ்வு இடம்பெறுகிறது என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:

பூநகரி பிரதேச செயலர் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலேயே தொடர்ச்சியாக இரவுவேளைகளில் மணலகழ்வு இடம்பெறுகிறது. இந்தச் செயற்பாட்டுக்கு பொலிஸாரும் துணைபோகின்றார்கள். பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து மணலகழ்வை கட்டுப்படுத்த வேண்டும்- என்றனர். (ச-113)

# வடக்கில் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் சில இடங்களில் மழைக்குச் சந்தர்ப்பம் உள்ளது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் கடும் மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது இலேசான மழை பெய்யும். வடமாகாணத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என எதிர்வுகூறப்படுகிறது. (ம)


# உற்சாகமாய் இருப்போம் நீரிழிவு நோயை தடுப்போம்

GINSOMIN®




சுறுசுறுப்பான, புத்துணர்வான, பலமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு

Ginsomin இன் பிரதான கூறான அசல் கொரியன் பன்க்ஸ் ஜின்சென் உடலில் இன்சுலின் செயற்பாட்டை மேம்படுத்துவதோடு இன்சுலின் எதிர்ப்பு செயற்பாட்டை குறைக்கிறது என்பது மருத்துவ ரீதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலான சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

MEGA We care For Your Wellness www.megawecare.lk

077 34 100 71
011 43 66 609

Ginsomin Srilanka

இறக்குமதி செய்து விநியோகிப்போர்: A Baur & Company (Pvt) Limited


# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். ஆதாயம் கிடைக்கும். பயணம் மேற்கொள்ள நேரிடும். மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு யோகம் உண்டாகும். சுபச்செலவுகள் ஏற்படக் கூடும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** உற்சாகமாக காணப்படுவீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கக்கூடும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சங்கடம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** உறவுகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமானநாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு தாய்வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். பொருட் சேர்க்கை உண்டாகும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் செலவுகளைச் சமாளிக்க வேண்டி வரும்.

# அரியாலையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூன் 18

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் மற்றும் சரஸ்வதி மத்திய நூல் நிலையம் ஆகியவற்றின் 104ஆவது ஆண்டு நிகழ்வை முன்னிட்டு குருதிக்கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிதொடக்கம் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (ச-66)

# அங்குரார்ப்பண கூட்டம் புதனன்று

சாவகச்சேரி, ஜூன் 18

மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி இந்து மயான அபிவிருத்திச்சபை தொடர்பான அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மட்டுவில் கண்ணகை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-9)

# சட்டவிரோத மணலகழ்வு பறங்கியாறில் முறியடிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 18

அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி மணலகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். மணலகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உழவியந்திரங்கள் நட்டாங்கண்டல் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பறங்கியாற்றுப் பகுதியில் மணலகழ்வு இடம்பெறுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.


சந்தேகநபர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-19)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## மரிய அருளானந்தம் மரிய பேணாட்

### (சமாதான நீதவான்)



மலர்வு 07.05.1958 உதிர்வு 13.06.2023

சாவகச்சேரி, கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரிய அருளானந்தம் மரிய பேணாட் கடந்த (13.06.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரிய அருளானந்தம் மரிய றோஸ் தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை மற்றும் லூசியா தம்பதியரின் அன்பு மருமகனும், மரிய திரேசாவின் பாசமிகு அன்புக் கணவரும், மரிய ஜெகநாத் (லண்டன்), மரிய ஜெயந்தினி (லண்டன்), மரிய ஜெயவதனி, மரிய ஜெயறமணி (லண்டன்), மரிய ஜெகதீபன் (சுவிஸ்), மரிய ஜெகரூபன் (லண்டன்), மரிய ஜெயரூபினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மரியதாஸ் (கனடா), காலஞ்சென்ற மரிய அல்போன்ஸ், மரிய அருள்தாஸ் (கனடா), மரிய ஞானசீலன் (சுவிஸ்), மரிய அன்ரனி, காலஞ்சென்ற மரிய யேசுதாசன், மரிய பொன்கலன் (பிரான்ஸ்), மரிய நவசீலன் (இத்தாலி), மரிய அல்வீனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரன், ஜெயா, ரவி (லண்டன்), விஜிக்குட்டி (லண்டன்), ஜோண் மரியா (கனடா), காலஞ்சென்ற மேரிகிளமன்ற், சியாமளா (சுவிஸ்), மேரி புளோரிடா, ரசியா (இத்தாலி), ஜெயசுதா (பிரான்ஸ்), ஜோண் ஸ்ரெலா (இத்தாலி), பொபிசாண்டஸ் ஆகியோரின் மைத்துனரும், வசந்தி, லதா, சுபத்திரா (லண்டன்), மீனா (லண்டன்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும், மொனிக்கம்மாவின் அன்பு பெறாமகனும், காலஞ்சென்றவர்களான சிங்கராயர், தேவசகாயம்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், மேரி நிறோஜினி (லண்டன்), அன்ரனி அருந்தவராசா (லண்டன்), விமலதாஸ், மரிய நியூட்டன் (லண்டன்), சலோமிகா (சுவிஸ்), றிசாட் நிலோயன், நிறோயன் (பிரான்ஸ்), நிந்துஜா, நிறோசா, பவித்திரா, சஜித்திரா, சஜிதன், கிஜித்திரா, யது, மதுசா (லண்டன்), தனுசன் (லண்டன்), டினு (லண்டன்), டிலான் (லண்டன்), டிஜன் (லண்டன்), மரிய ஷெடோன், மரிய ஷெறோன், மரிய ஷொடோனி, மரிய ஷொறோனி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனீபர் (கனடா), யோனத்தன் (கனடா), மீர்த்தி (கனடா), அல்போன்ஸ் (சுவிஸ்), யூலியா (சுவிஸ்), மரிய ஜெனிற்றா (மாவட்ட / நீதவான் நீதிமன்றம் - மன்னார்), மரிய அன்ரனிற்றா, மரிய யூட் நிக்சன், மரிய ஜஸ்ரீனா, சுயந்தன் சோபி, பிறித்தி, ஷெறின், ஆரோன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், நிவோன், நவின், அபிசா, டிவானா, அக்சயா, அஸ்வினி, பூஜா, நிதர்சன், சந்தோஷ், சரண், நிசானா, றிஸ்மியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (19.06.2023) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கச்சாய் வீதி, சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் நடைபெற்று புனித லிகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

**மரிய ஜெகநாத் -(0044 7931 317 000-மகன்)**
**மரிய அருள்தாஸ் - (0041 671 061 196)**
**மரிய ஞானசீலன் - (0041 792 762 722)**
**மரிய நவசீலன் - (0039 329 344 7848)**
**மரிய அன்ரனி - (077 070 0359)**
} **சகோதரன்**


**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs.50594) (N-1)

# மரண அறிவித்தல்

## செல்வன் அகிலன் அனுஷன்

**(Business Analyst at Air France - KLM Student Business it and Management, Hoge school in Holland)**
**(Anushan Bulding Chunnakam, Ahil Rest Maruthanarmadam, Inuvil)**



தோற்றம் 03.10.2001 மறைவு 12.06.2023

நெதர்லாந்து, ஆம்ஸ்ரடாமைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இணுவிலைச் சேர்ந்த அகிலன் அனுஷன் கடந்த (12.06.2023) திங்கட்கிழமை நெதர்லாந்தில் அகாலமரணமானார்.

அன்னார் இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற பரமநாதன் (CTB) மற்றும் சண்முகேஸ்வரி, இராசேந்திரம் (கிளி), லீலாவதி தம்பதிகளின் அன்புப் பேரனும், அகிலன் - கமலினி தம்பதிகளின் அருமைப் புதல்வனும், அபிஷாவின் பாசமிகு சகோதரனும், வசிகரன் - விஜிதா (ஜேர்மனி), வரதராஜன் - சயிதா (ஜேர்மனி), காலஞ்சென்ற சோபிதா மற்றும் தர்ஷன் (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்), பிரியா, முரளிதரன் - தர்மிகா (லண்டன்) ஆகியோரின் மருமகனும், கேசவன் (Ceylinco Life - Jaffna) - அஜந்தா, காலஞ்சென்ற மைதிலி மற்றும் சசிகரன் - தர்மினி (பிரான்ஸ்), தயாபரன் - குமுதினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும், துளிர்நிலா, சாய்நிலுக்ஷன், சைலஜன், சாயிதன், கௌசல்யா, தரணியா, தனிஸ்கா, திசாணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், வர்ஷா, வர்ணி, கனிமொழி, சாய்ராம், கபிசன், சதுசன், பைரவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2023) திங்கட்கிழமை Ookmeerweg 273, 1067 SP Amsterdam, Netherlands இல் 11.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**தந்தை - அகிலன் - 0031 624 500 495**
**சித்தப்பா - கேசவன் - 0094 779 988 039**
**மாமன் - தர்ஷன் - 0094 773 111 223**

**"திருப்பதி"**
**கே.கே.எஸ். வீதி, இணுவில் கிழக்கு.**

(CS/25250)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்
# நல்லூர், அரியாலை சயன்ஸ் அக்கடமியின் இ
# உயர்திரு சரா. புவ
# மணிவி



## நல்லைக்குருமணியின் ஆசிச்செய்தி

அன்புள்ளவர்களுக்கு!

கல்விசார் பெருந்தகையீர்!......

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளராக பணியாற்றி இன்று ஓய்வு பெறும் சரா என்னும் புவனேஸ்வரனின் மணிவிழா கண்டு அனைவரும் மகிழ்வடைய இருப்பது மகிழ்ச்சியினைத் தருகின்றது. கல்வித்துறையில் பல சாதனைகளை புரிந்து கல்வித் துறையில் பல மாணவர்களை உருவாக்கி, கல்வித்துறையும் தமிழர்களுடைய அடையாளத்தினையும் உண்டாக்கி கல்வித்துறையில் தனக்கென ஒரு சாதனையினை படைத்துக் கொண்டிருக்கும் சராவினுடைய மணிவிழா அனைத்து மக்களையும் மகிழ்வித்துக் கொண்டிருக்கின்றது. அவர் ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து கல்விப் பணிக்காகவும் சமூக பணிக்காகவும் தன்னை அர்ப்பணித்து குடும்பத்தினருடன் சுக தேகியாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். கௌரவித்து மணிவிழா, எடுக்கும் மணிவிழா சபையினரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். வெளிவரும் மலர் சிறப்புடன் அமைய இறையருளை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு


**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



## யாழ் மறைமாவட்ட குருமுதல்வரின் ஆசிச்செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கான ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றேன். இயற்கையிலே பருவகாலங்கள் மாறி மாறி வந்து கொண்டிருக்கும். ஆனால் மனிதர்களது வாழ்விலே இப்பருவங்கள் சென்றது சென்றது தான் அவை மீண்டும் ஒரு முறை வரா. இக்காலத்தில் ஒவ்வொரு மனிதராலும் ஆற்றப்படுகின்ற செயல்கள் அவரவர் ஆற்றலுக்கு ஏற்றவாறு வெளிப்படுகின்றன. இவ்வாறு ஒருவரால் ஆற்றப்பட்ட பணிகள், சேவைகள், சாதனைகள் என்பவற்றை அவர் வாழும் காலத்திலேயே பாராட்ட வேண்டும். இச்செயல் ஏனையோருக்கு அவரை வழிகாட்டியாக்க பேருதவியாக அமையும். அந்த வகையில் ஆசிரியர் சரா புவனேஸ்வரன் தனது கல்விச் சேவையில் பல வடிவங்களில் பணியாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் சிரேஷ்ட உடற்கல்வி விரிவுரையாளராக, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியராக, நல்லூர், அரியாலை "சயன்ஸ் அக்கடமி"யின் இயக்குநராகவும், "வெற்றித் தேர்வு" வெளியீடுகளின் பிரதம ஆசிரியருமாக கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலான கல்விப்பணியை ஆற்றி வருகின்றார் என்பதை அறிந்து நான் உளமார அவரை வாழ்த்துகின்றேன். கல்விப் பணியுடன் சமூக சேவையாளராகவும் அவர் செயற்பட்டு வருகின்றார் என்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. எனவே இந்நாளில் அவரை வாழ்த்தி தொடர்ந்து அவரது பணி சிறக்கவும் அவர் உடல் - உள நலத்துடன் மகிழ்ந்திருக்கவும் இறையாசீர் வேண்டுகின்றேன்.

**அருட்பணி. P.J. ஜெபரட்ணம்**
**குருமுதல்வர், யாழ். மறைமாவட்டம்**



## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

சம்பூர் மண்ணில் பிறந்து, தனது விடாமுயற்சியால் கல்வியில் உயர்ந்து விளங்கியர் திருமிகு. சரா. புவனேஸ்வரன் அவர்கள். ஆசிரியர்களுக்கான தொழிற்சங்க முயற்சியில் அயராது உழைத்து தனது பெயரை நிலைநாட்டியவர். ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக விளங்கிய இவரை யான் நன்கு அறிவேன். மூத்தோரை மதிக்கும் பண்புடைய ஆசிரியர், அகவை அறுபது நிறைவு பெற்று, மணிவிழாக் காண்பது மகிழ்ச்சி தருகிறது. சகல நலன்களுடனும், கோணேஸ்வரப் பெருமானின் நல்லருளால் நீடு வாழப் பிரார்த்திக்கின்றேன். தொடர்ந்தும் சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு, எமது சமூகத்தின் எதிர்கால விருத்திக்கு துணை செய்ய வேண்டும். மணிவிழா எடுக்கும் அவரது மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும் நன்றி கூறுவதோடு எனது நல்லாசிகளையும் வாழ்த்தினையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.**



## கௌரவ வட மாகாண ஆளுநரின் வாழ்த்துச்செய்தி

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.சரா. புவனேஸ்வரன் அவர்கள் தனது 60வது அகவை நிறைவில் மணிவிழாக் காணும் தருணத்தில் அவரை மனதார வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். 1988ஆம் ஆண்டு முதல் ஆசிரியப் பணியில் சிறப்புடன் செயலாற்றி பின் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றி பல ஆசிரிய மாணவர்களுக்கு வழிகாட்டியும் கல்விச் சமூகத்திற்கு பெரும் பணியாற்றியுள்ளார். அத்துடன் "வெற்றித்தேர்வு" வெளியீடுகளின் பிரதம ஆசிரியராக இருந்து ஆரம்ப வகுப்பு மாணவர்களின் வெற்றிக்கு ஊன்று கோலாக இருந்துள்ளார். இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராகவும் இறுதிவரை பணியாற்றியதோடு சமூகப்பணியிலும் தனது பங்களிப்பை அளித்து வருகின்றார். கற்றலுக்கான அடிப்படை வசதியற்ற மாணவர்களும் சமூகத்தில் கல்வி அறிவோடு திகழ வேண்டும் என்பதற்காக அவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், கையேடுகள் என்பவற்றை இலவசமாக வழங்கி ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுள்ளார். அத்துடன் சமூக சேவை வழங்கும் நிறுவனங்களில் முக்கிய உறுப்பினராக இருந்து பல சேவைகளை தனது வாழ்நாளில் முதற் கடமையாக ஆற்றி வருகின்றார். இந்நாளில் மணிவிழாக் காணும் திரு.சரா.புவனேஸ்வரன் அவர்களை மண்ணுலகிற்கு ஈன்ற இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டு இவர் வழியாக கல்விச் சமூகம் பெற்ற அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறி இவர் அனைத்து நலமும் பெற்று வாழ்வில் திகழ எனது இறையாசிகளோடு கூடிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**திருமதி.சான்ஸ் நிர்மலநாதன்**
**ஆளுநர், வடக்கு மாகாணம்.**



## வவுனியாபல்கலைக்கழக வேந்தரின் வாழ்த்துச் செய்தி

அரியாலையூருக்கு பெருமை தேடித்தந்து கொண்டிருக்கும் சராத்தம்பியென நான் அன்பாக அழைக்கும் சரா. புவனேஸ்வரனின் மணிவிழா மலரிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமையடைகின்றேன். கல்விப்புலத்தில் உயரப் பறக்கும் சரா அவர்கள் ஆயிரமாயிரமாக மாண்வர்களை உருவாக்கி வரும் "சயன்ஸ் அக்கடமி"யின் இயக்குநரும், தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளரும், "வெற்றித்தேர்வு" வெளியீடுகளின் பிரதம ஆசிரியரும், சிரேஷ்ட விரிவுரையாளருமாவார். அவை மட்டுமன்றி தலை சிறந்த சமூக சேவையாளருமாவார். அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக இருந்து இன்று வரை சமூகப் பணியாற்றி வருகிறார். இவர் தனது கல்வி நிறுவனத்தில் வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பதற்கான வாய்ப்பினை வழங்கி வருகின்றார். அது மாத்திரமன்றி கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கு விசேட கவனம் செலுத்தி உயரிய பெறுபேறுகளெடுக்க வழிகோலுகிறார். மற்றும் கெட்டிக்காரப் பிள்ளைகளைத் தட்டிக் கொடுத்து மேலும் சிறப்பாகச் சித்திபெற வழி வகுக்கிறார். மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் சிறந்த கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார். இதனால் அவருடைய பிள்ளைகள், உற்றார் உறவினர், ஊரவர் ஏன் இந்தப் பிரதேசமே நன்மையடைகிறது. நாமும் அவருடன் கைகோர்த்து செயற்பட விரும்புகிறோம் என்பதுடன் மணிவிழா நாயகனுக்கு மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**பேராசிரியர் சு. மோகனதாஸ்**
**வேந்தர், வவுனியா பல்கலைக்கழகம்**
**முன்னாள் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்.**



## வடக்கு மாகாணக் கல்வி பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கல்விப் புலத்தில் பல்வேறுபட்ட தளங்களில் சிறப்பாக பணியாற்றி அகவை 60 காணும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் பணியினை நயந்து வாழ்த்துச் செய்தியினை வழங்கு வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியர், மாணவர் நலன் சார்ந்த விடயங்களை தனது ஆற்றலினாலும் கல்விச் சிந்தனைகளினாலும் வழிநடத்திச் சென்ற இவர் கடந்த யுத்த காலங்களில் வடக்கில் தனித்துவமாக நின்று பணியாற்றிய பெருமைக் குரியவர். இவ்வாறாக ஆசிரியர் நலனிலும் கல்விச் செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்தி ஆசிரியர் உரிமைகளை வென்றெடுக்க இவருடாக செய்யப்பட்ட பணிகள் ஆசிரியர் சமூகம் உள்ளவரை நினைவுபடுத்தப்படும். இவ்வாறாகக் கல்வியுடன் தம்மை அர்ப்பணித்து மாணவர்களினதும் ஆசிரியர் களினதும் நல்வாழ்வுக்காக உயர்வான சேவையாற்றிய இவரின் சிறந்த சாதனைகளைப் பாராட்டுவதுடன் இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**A. ஜோண் குயின்ரஸ்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்கள் இல்லமே உங்கள் சரணாலயம். இதுவே உங்கள் அருங்காட்சியகம் அமையப்பெறும் இடம், முடிவில்லா கற்பனைகளின் பிம்பமாக, அதன் அழகிய வடிவங்களை புதிதாய் தோற்றுவித்து, நீங்கள் உங்களை பிரதிபலிக்கும் விதத்தை மீள்வடிவமைக்கின்றது. Rocell டைல்ஸ், குளியலறை சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் நேர்த்தியான தொகுப்பானது அதன் ஈர்த்தெடுக்கும் நிறம், அமைப்பு, வடிவம் மற்றும் வனப்பு என்பனவற்றின் கொண்டாட்டங்களினூடாக, உங்கள் இல்லத்தை எழில்மிகு அழகின் உறைவிடமாக மாற்றுகின்றது.

அழையுங்கள் 076 6 22 33 44

Rocell


## தாயகத்தில் பௌத்த மயமாக்கல்

# கூட்டமைப்பும், விக்கினேஸ்வரனும் ஆக்கிரமிப்புகளுக்குத் துணை

## கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூன் 18**

**தமிழர் தாயகத்தில் ஆட்சியாளர்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு கூட்டமைப்பினரும், விக்னேஸ்வரன் தரப்பினரும் அரசுக்குத் துணைபோகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் - கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின்தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள - பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளை தமிழர் தாயகத்தில் ஆட்சியாளர்கள் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்ற நிலையில் எமது மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்கின்ற சில தரப்புகளும் இதனை மக்களிடத்தே கொண்டுசென்று சேர்க்காமல், இதற்கெதிராகப் போராடாமல் இருக்கின்றமை இந்த ஆக்கிரமிப்புகளுக்கான ஆதரவு நடவடிக்கையாகவே அவதானிக்கத் தோன்றுகின்றது.

'இங்கு தமிழ் பௌத்தர்களே வாழவில்லை. எல்லாமே சிங்கள பௌத்தம்' என்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி வருகின்ற இன்றைய சூழலில், அண்மையில் ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்ற பின்னர் இதற்கு மாறானதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்த பலரும் எத்தனிக்கின்றனர். அதாவது இங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என ஜனாதிபதி கூறியதாகவும், தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளரை ஜனாதிபதி இராஜினாமா செய்ய வைத்ததாகவும் கூறிக்கொண்டு ஜனாதிபதியைப் புகழ்கின்ற நிலைமையை ஏற்படுத்தப் பார்க்கின்றனர்.

ஆனால் உண்மையாகவே ஜனாதிபதியினதோ அல்லது ஆட்சியாளர்களினதோ சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகள் என்பன பௌத்த மேலாதிக்கம் கொண்டதாகவே இருக்கின்றன. இத்தகைய சிந்தனைச் செயற்பாடுகளில் இருந்து எமது பாரம்பரியங்களை பாதுகாத்துக் கொள்கின்ற நடவடிக்கையை நாங்கள் முன்னெடுக்க வேண்டியது அவசியமானது. அதனை விடுத்து ஆட்சியாளர்களின் இத்தகைய சிந்தனைச் செயற்பாடுகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவைக் கொடுப்பது ஆபத்தானது என்றார். (அ-ம.26,27)






## வாரிவனநாதர் பெருந்திருவிழா

சாவகச்சேரி, வாரிவனநாத சிவன் கோவில் பெருந்திருவிழா நேற்றுச் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீமைக் கருவே மரங்களை

# அறிக்கை வரமுன்னர் அழிப்பதற்கு முடிவு!



**யாழ்ப்பாணம், ஜூன் 18**

**எழுவைதீவில் காணப்படும் சீமைக் கருவே மரங்கள் தொடர்பான அறிக்கை கொழும்பிலிருந்து வருவதற்கு முன்பதாகவே அந்த மரங்களை அடியோடு அகற்றுவதற்கான முடிவு ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.**

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கடந்த வியாழக்கிழமை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது. இதன்போதே மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சீமைக் கருவே மரங்கள் குறித்தும் அது பொதுமக்களுக்கு பாதுகாப்பற்றது என்ற அடிப்படையிலும் அவற்றை அழிப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினரிடம் முழுமையான அறிக்கை கோரி விடயம் பாரதீனப்படுத்தப்பட்டிருந்தது. மத்திய சுற்றாடல் அதிகார சபையால் சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை பிரிவுக்கு அனுப்பப்பட்டு சீமைக் கருவே மரம் மருத்துவ குணம் வாய்ந்ததா இல்லை மக்களுக்குப் பாதிப்பானதா என ஆராயப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முழுமையான அறிக்கை கிடைக்கப் பெறுவதற்கு முன்னரே, ஜே.சி.பி. வாகனங்களைப் பயன்படுத்தி மரங்களை அடியோடு அகழ்ந்து அழிப்பதற்கு அனுமதியளித்துள்ளார்.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை பிரதேச செயலரிடம் கேட்டபோது, பொதுமக்கள் மரங்களை அகற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அது மருத்துவ குணம் உடையதாக இருப்பினும் அல்லது இல்லாதுவிடினும் அகற்றுமாறு கூறியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மரங்களை அகற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மரங்களை அகற்றுவதற்கு உரிய ஜே.சி.பி.க்கான எரிபொருளையும் வழங்குவதாக அமைச்சர் உறுதியளித்ததாக, பிரதேச செயலர் தெரிவித்தார். (ஒ-125)

## கறுவாச் செய்கை செயலமர்வு

வடக்கு மாகாணத்தில் கறுவாச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக கறுவாச் செய்கை தொடர்பான இரண்டாவது செயலமர்வு மருதனார்மடத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாய நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

செயலமர்வில் கறுவாக் கன்றுகளை உற்பத்தி செய்து, இருமடங்கு இலாபத்தை எவ்வாறு பெறுதல்? என்பது தொடர்பில் கறுவா ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளரான கலாநிதி.ஜெயசிங்க விளக்கமளித்தார்.

அத்துடன் கறுவாக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு எவ்வாறு கூட்டெரு தயாரித்து பொலித்தீன் பைகளில் கறுவா விதைகள் இடப்படவேண்டும் என செயல்முறை ரீதியாக செய்து காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து கறுவாப் பட்டையிலிருந்து கறுவாவை எவ்வாறு பிரித்தெடுப்பது?, உரை விடவேண்டிய முறை தொடர்பிலும் செய்முறை ரீதியாகத் தெளிவுபடுத்தப்பட்டது. (ச-66)

## வேப்பம் தேன் உற்பத்தி நெடுந்தீவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வேப்பம் தேன் உற்பத்தியைப் பெருக்கும் முகமாக பயனாளிகளுக்கான பயிற்சி எதிர்வரும் வாரமளவில் நெடுந்தீவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி சசிபிரபா கைலேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நெடுந்தீவில் வேப்பம் தேன் அதிகம் உற்பத்தி செய்யும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள தேனீ வளர்ப்புப் பயிற்சியை நெடுந்தீவு பிரதேசத்திலும் முன்னெடுக்கவுள்ளோம். 4 பயனாளிகள் சுயதொழிலை முன்னெடுப்பதற்கு முன்வந்துள்ளார்கள். அவர்களுக்கு தலா 35 ஆயிரம் ரூபா பெறுமதியான தேனீ வளர்ப்பு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. அதிகளவான தேனீ வளர்ப்புப் பெட்டிகளை பயனாளிகளுக்கு வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் அதிக தேனைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

வேப்பம் தேனுக்கான சந்தை வாய்ப்பும், அதனை ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. சந்தைப்படுத்தல் தொடர்புகளுக்கு யாழ். மாவட்ட விவசாயப் பிரிவினிடமும் முறையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம் - என்றார். (ஒ-125)

## பன்றி நெல் தாக்கங்கள் நடமாடும் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ். மாவட்டத்தில் பன்றிநெல் மற்றும் களைநெல் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், அவற்றைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான நடமாடும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை விவசாயத்திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை இணைந்து விவசாயிகள் ஒன்று கூடும் இடங்களில் நடத்தவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இந்த முறை ஏறத்தாழ 12 ஆயிரத்து 500 ஹெக்ரேயர் விஸ்தீரணத்தில் மானாவாரி பயிற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. கடந்த காலபோகங்களில் பன்றி நெல்லின் தாக்கம், மறவன்புலவு, சாவகச்சேரி, மாசியப்பிட்டி, கந்தரோடை, அளவெட்டி, கரவெட்டி உள்ளிட்ட இடங்களில் அடையாளம் காணப்பட்டது. அதனால் நெல் விளைச்சல் குறைவடைந்திருந்தது. இந்நிலையில் இம்முறை இதுதொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வுகள், கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. (ச-27)

| | | |
|---|---|---|
| 19.06.2023 | சாவகச்சேரி | மு.ப. 9.30 |
| | கைதடி | பி.ப. 2 மணி |
| 20.06.2023 | கரவெட்டி | மு.ப. 9.30 |
| | புலோலி | பி.ப 1 மணி |
| | அம்பன் | பி.ப 3மணி |
| 21.06.2023 | புத்தூர் | மு.ப 9.30 |
| | உரும்பிராய் | பி.ப 1.00 |
| | நல்லூர் | பி.ப 3.00 |
| 22.06.203 | அளவெட்டி | மு.ப 9.30 |
| | தொல்புரம் | பி.ப 2.00 |
| 23.06.2023 | உடுவில் | மு.ப 9.30 |
| | சண்டிலிப்பாய் | பி.ப 2.00 |



## யாழ்.குடாவில் பரவலாக சி.வெங்காயச் செய்கை!

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் காலபோக சின்ன வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த முறை ஆயிரத்து 900 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சின்னவெங்காயச் செய்கை பயிரிடப்படவுள்ளது என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. வலி.கிழக்கில் நீர்வேலி, கோப்பாய், புத்தூர், சிறுப்பிட்டி, ஆவரங்கால், இடைக்காடு, நவக்கிரி, உரும்பிராய், அச்சுவேலி, ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் உட்பட வலிகாமம் தீவுப்பகுதி, தென்மராட்சி போன்ற இடங்களில் பரவலாக சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது.

அதேவேளை தற்போது சந்தைகளில் சின்ன வெங்காயத்துக்கு பற்றாக்குறை நிலவுவதுடன் அவற்றின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ சின்னவெங்காயம் 350 ரூபாவாக விற்கப்படுகின்றது என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## விபத்தில் மூவர் காயம்

பளை, ஜூன் 18

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை காலை இத்தாவில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது. காயமடைந்தவர்கள் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம-9)

## மணற்கொள்ளையில் முன்னாள் இராணுவ அதிகாரி!

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 18

வடமராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியில் சட்டவிரோதமாக மணல் கொள்ளையில் இராணுவத்தில் பணியாற்றிய ஒருவர் ஈடுபடுகிறார் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம்பெற்ற வேளை அவர் இதனை சுட்டிக்காட்டினார். குறித்த பகுதியில் மணல் யாட் அமைத்து சட்டவிரோதமான மணலகழ்வு இடம்பெறுகிறது. அதனை பொலிஸார் கண்டு கொள்வதில்லை. இராணுவத்தில் பணியாற்றிய ஒருவரே சட்டவிரோதமான மணல் அகழ்வில் ஈடுபடுவதால் மக்கள் அவர் குறித்த தகவல்களை வழங்க அச்சப்படுகின்றனர் என்று சுமந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார். (ச-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சாவுகள் சொல்லும் செய்தி

இலங்கையின் முதல்தரப் பல்கலைக்கழகம் என்று பேராதனைப் பல்கலைக்கழகம், 'டைம்ஸ்' தரப்படுத்தலில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதேதரப்படுத்தலில் இலங்கையில் உள்வாங்கப்பட்ட இன்னொரு பல்கலைக்கழகமாக கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகமும் இடம்பிடித்திருந்தது. ஒரு பல்கலைக்கழகத்தின் போதனைமுறை, பாடத்திட்டங்கள், மாணவர்களின் ஆளுமை விருத்தி, கற்றலுக்கான வசதிகள் , கற்றலுக்கான சூழல் என்று பல விடயங்கள் இந்தத் தரப்படுத்தலில் உள்வாங்கப்பட்டிருந்தன. இலங்கையில் வேறெந்தப் பல்கலைக்கழகமும் இந்தத் தரப்படுத்தலுக்குள் உள்வாங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சர்வதேசத் தரம் வாய்ந்த தரப்படுத்தலுக்குள் உள்வாங்கப்பட்ட இதே இரு முன்னிலைப் பல்கலைக்கழகங்களின் பொறியியல் பீடங்களில் கல்வி பயிலும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த இரு மாணவர்கள் நேற்றுமுன்தினம் தவறான முடிவெடுத்து தம் உயிரை மாய்த்திருக்கின்றனர். இலங்கையில் மாணவ சமூகத்திடையே தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்ளும் போக்கு அண்மைக்காலமாக தீவிரமாக ஊடுருவி வருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், அதன் தொடர்ச்சியாகவும் ஆகப்பெரும் ஆபத்தம்சமாகவும் அமைந்திருக்கின்றது இந்த மாணவர்களின் 'உயிர்மாய்ப்புகள்'. அதேநேரம், இலங்கையின் கற்றல் – கற்பித்தல் நடவடிக்கைகளின் போக்கும் அதன் உள்ளம்சங்களும் 'காலத்துக்கு ஏற்ற மாற்றம்கருதி' மறுசீரமைக்கப்பட வேண்டிய கட்டாயத்தையும் இந்த 'மாணவர் தற்கொலைகள்' வெளிப்படுத்தவே செய்கின்றன.

பல்கலைக்கழக மாணவர்கள் என்போர் ஒப்பீட்டளவில் 'கற்றல் அறிவு' அதிகமுள்ளவர்கள். தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்ளக்கூடாது என்பதும், அதனால் அவர்களின் குடும்பங்களும், சமூகமும் சந்திக்கப்போகும் பாதிப்புகளும் அவர்களுக்கு மிகமிக நன்றாகவே தெரியும். அப்படியிருந்தும் இந்த அசம்பாவிதங்கள் சம்பவித்திருக்கின்றன என்றால், இலங்கையின் கற்றல் – கற்பித்தல்முறை புத்தகப்பூச்சிகளை மட்டுமே உற்பவிப்பதாக அமைந்துள்ளது என்பதே இதன் அர்த்தப்பாடாக அமைகின்றதல்லவா?.

எமது நாட்டில் பாடசாலைகளிலும் சரி, பல்கலைக்கழகங்களிலும் சரி புத்தகங்களுக்கும் பாடவிதானங்களுக்கும் அப்பாற்பட்ட கற்றல் நடவடிக்கைகள் மாணவர்களிடத்தில் தீவிரமாகவும் ஆழமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும். 'ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பார்கள். அதுபோல்தான் பாடவிதானக்கல்வியை மட்டுமே முன்னிலைப்படுத்தும் போக்கு பயனற்றது. வாழ்க்கையையும், அது கற்றுத்தரும் வலி மிகுந்த அனுபவங்களையும், அழுத்தங்களையும், நெருக்கடிகளையும் இயல்பாக அணுகுகின்ற மனப்பாங்கு உள்ளவர்களாக மாணவர்கள் உருவாக்கப்படவேண்டும். இதற்கு பாடவிதானங்களுக்கு இணைந்தாற்போல் தலைமைத்துவப் பண்பும், உளவியல் திடமும் மாணவர்களுக்குப் புகட்டப்பட வேண்டும்.

வெளிநாட்டு மாணவர்களைக் கவரும் வகையில், இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி மாற்றியமைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் துணைவேந்தர்களுடனான நிகழ்வொன்றில் வைத்துத் தெரிவித்திருந்தார். வெளிநாட்டு மாணவர்களின் டொலர் இலங்கைக்கு அவசியமென்பதால் இந்த மறுசீரமைப்பு அவருக்கு அவசியமானதாகத் தெரியலாம். அதை மறுப்பதற்குமில்லை. ஆனால் முதலில் உள்நாட்டு மாணவர்களையே , சமூகத்துக்கு இசைவானவர்களாக, நெருக்கடிகளை எதிர்கொள்ளும் ஆற்றல் உள்ளவர்களாக மாற்றமுடியாத பல்கலைக்கழக முறைமையை வைத்துக்கொண்டு எந்தமுகத்தோடு வெளிநாட்டு மாணவர்களை அழைக்கப்போகின்றோம்? மாணவர் சக்தி என்பது மகோன்னதமானது. அதனை சீரியதாக வழிப்படுத்தினாலேயே வலிமையான தேசத்தை எதிர்காலத்தில் கட்டியெழுப்பமுடியும். அதைவிடுத்து, வெறும் புத்தகப் பூச்சிகளை உருவாக்கும் பரீட்சை மையக் கல்வி தொடர்ந்தால், ஆளுமையற்ற, நெருக்கடியைச் சந்திக்கத் திராணியற்ற, நோஞ்சன் சமூகமே உருவாகும். அதனையே இரு வேறு பல்கலைக்கழகங்களிலும் நேற்றுமுன்தினம் உயிர்மாய்த்த மாணவர்களின் சாவுகள் சொல்கின்றன.

**நாளொரு நல்வார்த்தை**

"மனத்தளர்ச்சி நம்மோடு நம்மைச் சார்ந்தவர்களின் மகிழ்ச்சியையும் போக்கடித்து விடும்"
— ரவிசங்கர்



### கிளி. தெற்கு கல்வி வலயத்தில்

# அதிபர் இல்லாமல் 9 பாடசாலைகள்!

**கிளிநொச்சி, ஜூன் 18**

**கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட 66 பாடசாலைகளில் 9 பாடசாலைகள், கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக அதிபர்கள் இல்லாது இயங்கி வருகின்றன. மாகாணக் கல்வித் திணைக்களம் இதுகுறித்து கவனம் செலுத்தவேண்டுமென கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் தேவைப்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம், அதிபர்கள், பாடரீதியான ஆசிரியர்கள் ஆகியோருக்கான பற்றாக்குறை மற்றும் போக்குவரத்து வசதிகள் இன்மை உள்ளிட்டவற்றால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது. இங்குள்ள 66 பாடசாலைகளில் ஒன்பது பாடசாலைகள் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக அதிபர்கள் இன்றி இயங்குகின்றன. அத்துடன் ஆசிரிய வளவாளர்கள் பற்றாக்குறையும் காணப்படுகிறது. எனவே மாகாணக் கல்வித் திணைக்களம் இதுதொடர்பில் கவனம் செலுத்தி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும் - என்றார். (ச-113)

## புலிகளை மீளுருவாக்க போதை வர்த்தகமாம்



*இலங்கையர் 10 பேர் கைது*

கொழும்பு, ஜூன் 18
ஆயுதுங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் 10 இலங்கையர்கள் உட்பட 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என இந்திய தேசியப் புலனாய்வு முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது.
விடுதலைப்புலிகளுக்கு புத்துயிர் அளிப்பதற்காக ஆயுதம் பணம் போதைப்பொருள் என்பவற்றைச் சேகரித்தல் - பதுக்கி வைத்தல் போன்றவற்றுக்காக இவர்கள் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ச-இ)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது!

வவுனியா, ஜூன் 18
சொகுசுப் பேருந்தில் கஞ்சாவைக் கடத்திச் சென்ற நபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ். - கொழும்பு நோக்கிச் செல்லும் பேருந்தில் கஞ்சா கடத்தப்படுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய பேருந்தை வழிமறித்துச் சோதனையிட்ட போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (ம-110)

**நாளை** 19.06.2023 திங்கட்கிழமை ஆனி 04

சுபநேரம் : 11.54 - 01.24
ராகுகாலம் : 07.24 - 08.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் அனுமதிப்பத்திரம்

## துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரை

கொழும்பு, ஜூன் 18

**தனியார் வகுப்பு ஆசிரியர்களை ஒழுங்குபடுத்தி சட்டரீதியாக தொழில் அங்கீகாரம் வழங்குவதற்கு அவர்களுக்கு கற்பித்தல் அனுமதிப்பத்திரம் வழங்குவது குறித்த முறைமையை தயாரிக்குமாறு கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரைத்துள்ளது.**

கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.இராதாகிருஷ்ணன் தலைமையில் நாடாளுமன்றில் கூடியது.

இதன்போது கல்வித்துறையில் தற்போது காணப்படும் சட்டக்கட்டமைபுகள் காலத்தின் தேவைக்கேற்ப மறுசீரமைக்கப்படுவது குறித்து ஆராயப்பட்டது. ஆசிரியர் இடமாற்றம் மற்றும் கல்வி ஆலோசனைச் சேவையின் சிக்கல்கள் தொடர்பிலும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

அரச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை குறித்தும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் நாடளாவிய ரீதியில் தனியார் வகுப்புகளை நடத்தும் தனியார் ஆசிரியர்களின் தரம் குறித்து குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்படி, தனியார் ஆசிரியர்களை ஒழுங்குபடுத்தி அவர்களின் தொழிலுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவதே சிறந்தது என கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு குழு பரிந்துரைத்தது. (ச-இ)

## நிதி, பாதுகாப்புக்கு பதில் அமைச்சர்கள்

கொழும்பு, ஜூன் 18


ஷெஹான் சேமசிங்க


பிரமித பண்டார

பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவும், பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரமித பண்டார தென்னகோனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்குச் சென்றுள்ளார். இதையடுத்தே பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவும், பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரமித பண்டார தென்னகோனும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-இ)

## வரிக்கொள்கையை மாற்றாவிடின் தொழிற்சங்கப் போர் வெடிக்கும்!

*அரச மருத்துவ அதிகாரிகள் எச்சரிக்கை*

வாக்குறுதி அளித்ததன் பிரகாரம் இந்த மாதத்துக்குள் அரசாங்கம் வரிக்கொள்கையில் திருத்தம் மேற்கொள்ளாவிட்டால், எதிர்வரும் மாதத்தில் பெரும் தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித்த அழுத்கே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாதத்துக்குள் வரிக்கொள்கையில் திருத்தம் ஒன்றை மேற்கொள்வதாக அரசாங்கம் தொழிற்சங்க ஒன்றியத்துக்கு வாக்குறுதி அளித்திருந்தது. வாக்குறுதியை மேலும் தாமதிப்பதனால் விசேட மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் பல்வேறு துறைசார்ந்த தொழில் வல்லுநர்கள் நிரந்தரமாகவே நாட்டை விட்டுச் செல்லும் அபாயம் இருந்து வருகிறது.

நாட்டுக்கும் தொழில் வல்லுநர்களுக்கும் பொருத்தமான வரித்திருத்தம் ஒன்றை இந்த மாதத்தில் மேற்கொள்வதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்தாலும் இரண்டு வாரங்கள் கழிந்துள்ளபோதும் அது தொடர்பில் தீர்மானம் ஒன்றையோ அறிவிப்பொன்றையோ மேற்கொள்ளாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும் - என்றார். (ம)

## ரஷ்ய அணுமின் உலை இறுதி முடிவு கிடப்பில்!

கொழும்பு, ஜூன் 18

இலங்கையில் ரஷ்யாவின் அணுமின் உலையொன்றை உருவாக்குவதற்கு அனுமதிப்பதா? இல்லையா? என்பது குறித்து இலங்கை இன்னமும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவின் மிகப் பெரிய அணுமின் நிலைய நிறுவனமான ரொசாட்டோம் இலங்கையில் முதலீடு செய்ய விருப்பம் வெளியிட்டுள்ளது. இதன் மூலம் 500 மெகாவாற் வலுச்சக்தியை உற்பத்தி செய்யமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளது என்றும் தெரியவருகின்றது. (ம-இ)

## ஓட்டோ சாரதி விபத்தில் பலி!

கொழும்பு, ஜூன் 18

கொழும்பில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஓட்டோச் சாரதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

வெள்ளவத்தையில் இருந்து கொள்ளுப்பிட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓட்டோ பம்பலப்பிட்டி வீதியில் பயணித்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர தொலைபேசி கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த ஓட்டோச் சாரதி களுபோவில போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். (ம-22)

## பேருந்துகள் விபத்து மாணவர்கள் உட்பட 6 பேருக்குக் காயம்!

கொழும்பு, ஜூன் 18

தியத்தலாவ பகுதியில், பாடசாலைப் பேருந்து ஒன்றும், தனியார் பயணிகள் பேருந்து ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் 5 மாணவர்கள் உட்பட 6 பேர் காயமடைந்தனர்.

பொரலந்தையில் இருந்து, பாடசாலை மாணவர்களை ஏற்றிக் கொண்டு பண்டாரவளை நோக்கிப் பயணித்த பேருந்துடன், மன்னாரில் இருந்து தியத்தலாவ நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. (ம-இ)



## குடும்பத்தலைவர் வெட்டிக்கொலை!

கொழும்பு, ஜூன் 18

தென்மாகாணத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மத்துகம, பெலவத்தை நகரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மிரிஸ்வத்த பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவரே உயிரிழந்துள்ளார். கொலையாளி இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என பொலிஸார் தெரிவித்தனர். (ச-22)

## சிறைகளில் இடநெருக்கடி: விரைவில் வீட்டுக்காவல்!

கொழும்பு, ஜூன் 18

சிறுகுற்றங்கள் புரிந்தோரை சிறைப்படுத்துவதற்குப் பதிலாக வீட்டுக்காவலில் தடுத்து வைப்பது தொடர்பில் ஆராயப்படுகிறது என சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் போதைப்பொருள் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. சிறைச்சாலைகள் பலவற்றில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்திடம் புதிதாக சிறைச்சாலைகளை நிர்மாணிப்பதற்கு நிதிவசதியில்லை.

அதன்காரணமாக சிறுகுற்றங்கள் புரிந்தோரை குறிப்பாக தண்டப்பணம் செலுத்த முடியாத காரணத்தால் சிறைவாசம் அனுபவித்து வருவோரை வீட்டுக்காவலில் வைப்பது பற்றி ஆராயப்படுகிறது.

விரைவில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-6)

## மாணவி சடலமாக மீட்பு!


கொழும்பு, ஜூன் 18

கொழும்பில், தூக்கிலிருந்து யுவதியொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகக் கொழும்பு தேசிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-22)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாணலிங்கேஸ்வரம் அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் சிவன் கோயில்



## கூறுவிலை கோரல் இராஜகோபுரம்

கலசம் உட்பட 59' உயரம் கொண்ட இராஜ கோபுரம் அமைப்பதற்கு சிற்பக் கலைஞர்களிடம் இருந்து கூறுவிலை மனுக் கோரப்படுகின்றது.

100' நீளம் - 40' அகலம் உடைய மண்டபம் தட்டை பிளேட் அடித்தல்.

100' நீளம் கபோதக வளைவு அடித்தல்

தட்டை பிளேட் மேல் பூச்சு, கீழ்ப்பூச்சு ஆகிய வேலைகளுக்கும் கூறுவிலை கோரப்படுகின்றது. உங்கள் எழுத்து மூலமான கூறுவிலை கேள்விகளை ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கவும். 28.06.2023 இற்கு முன்னதாக **076 409 6121** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி மேலதிக விபரங் களைத் தெரிந்து கொள்ளலாம்.

**நர்மதா நதீஸ்வரர் சிவன் கோயில்,**
**மாந்தை கிழக்கு, விநாயகபுரம்**
**ஒட்டங்குளம்,**
**துனுக்காய்.**

(CS/50881)AH-1

## புதிய ஆரம்பம்..........

## நொதேண் சென்றல் வைத்தியசாலையின் தாதிய பயிற்சிநெறி

நொதேண் சென்றல் வைத்தியசாலையில் தாதியர்களுக்கான புதிய பயிற்சிப் பாடநெறிகள் ஆரம்பமாகவுள்ளது. தாதியப் பயிற்சி நெறியில் ஆர்வமுள்ளவர் கள் 20.06.2023 ம் திகதிக்கு முன்பாக தங்களது பெயரை நொதேண் சென்றல் வைத்தியசாலையில் மனிதவளப்பகுதியில் (HR) நேரில் வந்து பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பயிற்சியின் முடிவில் **அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிச்சான்றிதழ்** வழங்கப்படு வதுடன் நொதேண் சென்றல் வைத்தியசாலையிலேயே வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கான அதிக சந்தர்ப்பமும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தகைமைகள்**

1. க.பொ.த சாதாரண பரீட்சையில் கணிதபாடத்திலும் விஞ்ஞானப்பாடத்தி லும் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
2. யாழ்மாவட்ட எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

**மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே உள்ளீர்க்கப்படவுள்ளதால் பதிவுகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.**

மேலதிக தகவல்களுக்கு:- நொதேண் சென்றல் வைத்தியசாலை
**0217217217**
northernhrm@gmail.com

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த ஆண்டு (29.06.2022) அன்று சரவணை கதிர்வேலாயுதசுவாமி தீர்த்தக்கேணியில் அகாலமரணமடைந்த

## சதானந்தன் விதுஷன்



அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அன்னாரின் இல்லத்தில் இன்று (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருவதோடு இன்று நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

தோற்றம் 01.08.2004 மறைவு 29.06.2022

சரவணை மேற்கு, வேலணை, 2 ஆம் வட்டாரம்.
குடும்பத்தினர் 076 915 1026

## வீடு வாடகைக்கு

யாழ் போதனா வைத்தியசாலைக்கு அருகில் 05 அறைகள் ,02 வரவேற்பறை, 03 குளியலறை மற்றும் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. பொறியியலாளர், மருத்துவர், விரிவுரையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**077 735 0790**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13 . 04 . 1943 மறைவு 30 . 06 . 2022

## கந்தையா இராஜதுரை

(இராசா இரும்பகம் - உரிமையாளர்)

திதி: பிரதமை

அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அப்பாவே!
உங்கள் பாசமான முகம் பார்த்து ஓர் ஆண்டு ஆனதோ
உங்கள் முகம் காண இன்றுவரை பரிதவித்து நிற்கின்றோம்
எங்கள் நிழல் எங்கள் கூடவே வருவது போல
உங்கள் புன்னகை பூத்த முகம் எங்கள் நினைவில்
என்றுமே மறையாது
எங்கள் இதயங்களில் நாம் வாழும் காலம் வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## முருங்கைக்காய் விலை இருமடங்கு

யாழ்., ஜூன் 18

யாழ். குடாநாட்டில் முருங்கைக்காய் விலை இம்முறை சடுதியாக அதிகரித் துள்ளது என்று தெரிவிக்கப் படுகிறது.

தற்போது நிலவும் கடும் வறட்சி மற்றும் வெப்பத் தால் முருங்கைமரங்கள் ஒருவித நோய்த் தாக்கத்தால் பாதிப்புறுகின்றன. அதனால் காய்க் கும் தன்மையை அவை இழந் துள்ளன. அதன்காரணமாக சந்தைகளில் முருங்கைக்காய் விலை சடுதியாக உயர்ந்துள்ளது. முன்னதாக கிலோ 600 ரூபாவாக விற்பனை செய்யப் பட்ட முருங்கைக்காய் தற்போது கிலோ ஆயிரத்து 600 ரூபாவாக அதிகரித் துள்ளன என நுகர்வோர் தெரி வித்துள்ளனர்.

(ச-17)

## மணமகள் தேவை

1979, இந்து, சதயம், Teacher பருத்தித்துறை, மணமகன் பதிவு இல. 9263, தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. www.EQMarriage Service.com. அழையுங்கள் 076 664 9401. Ensured Quality Lanka Pvt Ltd.,Colombo 04.

CS/24863)AH-1

## மணமகன் தேவை

1995, இந்து, உத்தராடம், Teacher யாழ்ப்பாணம், மணமகள் பதிவு இல. 8963, தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. www.EQMarriage Service.com. அழையுங்கள் 076 664 9401. Ensured Quality Lanka Pvt Ltd.,Colombo 04

CS/21952)AH-1

# Biomedical Technician

## Job duties:

- Install, maintain, and repair biomedical equipment
- Test and calibrate parts, identifying parts for repair or replacement.
- Perform routine preventative maintenance of equipment to ensure high-quality treatment for patients

## Requirements

- HND Electrical Engineering or equivalent
- Age below 45
- Min 2 years experience in Biomedical engineering field
- Computer literacy
- Good communication skills
- Interpersonal Skills and ability to work as a team
- Strong analytical skills with excellent communication skills
- Applicants should be flexible to work shifts


Successful candidates will be placed on an attractive renumeration package based on qualification and experience

**Please email your CV with 2 non related refrees to northernhrm@gmail.com**

Northern Central Hospitals
342 Palali Road, Thirunelvely, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 19 . 03 . 1958

மறைவு 19 . 05 . 2023

கடந்த 19.05.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் திருநாவுக்கரசு நந்தகுமார்

( மன்னார் கிறீம் ஹவுஸ் உரிமையாளர், சாந்திப்புர வீட்டுத்திட்ட முன்னாள் தலைவர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (20.06.2023) செவ்வாய்க்கிழமை 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு நந்தகுமார் குடும்பம் சார்பாக அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு எமது ஆறாத்துயரில் பங்கெடுத்து ஆறுதல் கூறியும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

44A, கொழும்புத்துறை வீதி
சுண்டுக்குழி

077 575 8836 குடும்பத்தினர்.

(CS/25267)AH-1

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 28 . 06 . 1942

மறைவு 29 . 06 . 2022

### அமரர் தங்கம்மா செல்வராசா

(திதி :- ஆனி மாத வளர்பிறை பிரதமை)

எம்மைவிட்டு பிரிந்து
ஆண்டு ஒன்று கடந்திட்ட போதிலும் எமது உள்ளத்தில் வாழ்ந்து வழிகாட்டியாய் திகழும் எமது தெய்வத்தின் 1ஆம் ஆண்டு நினைவு திதியில் வணங்கி பிரார்த்தித்து ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மாசிவன்
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

(CS 25280) A-1

## மரண அறிவித்தல்

### விக்கினேஸ்வரன் அபிநயன்

(3ஆம் வருடமாணவன் - பொறியியல் பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், பழைய மாணவன் யா/இந்துக் கல்லூரி)



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் அபிநயன் அவர்கள் கடந்த (16.06.2023) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் விக்கினேஸ்வரன் கலைச்செல்வி (ஆசிரியர், யா/ ஊர்காவற்றுறை றோ.க.ஆண்கள் பாடசாலை) தம்பதியரின் கனிஷ்ட மகனும், அட்ஷகனின் (தாதிய மாணவன், தாதிய பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்) அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் சரஸ்வதி, கணேசன் கமலாம்பிகை (ஓய்வு பெற்ற நெசவாசிரியர்) ஆகியோரின் பாசமிகு பேரனும், ஞானசோதியன் சறோஜினி தேவி (ஓய்வு நிலை அதிபர்கள் யா/வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்), பிரணதார்த்திகரன் (பிரதம ஆசிரியர் - தினக்குரல் - கொழும்பு), வசந்தா, சோமசேகரன் - அனுஷா (இலண்டன்), கருணாகரன் சிவானி (இலண்டன்), லலிதாம்பிகை சிவசுப்பிரமணியம் (கனடா), மங்கையர்க்கரசி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற கந்தசாமி, குகப்பிரியா சுரேஸ் (சுவிஸ்) ஆகியோரின் பெறாமகனும், சம்யுக்தாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற பஞ்சலிங்கம், குகப்பிரியா விஜய மனோரஞ்சன் (கொழும்பு), கமலநேசன் நந்தினி (சுவிஸ்), காலஞ்சென்ற இலங்கைநேசன், தவநேசன் மஞ்சு (கொழும்பு), அமரர் சிவநேசன், தில்லைநாதன் (பிரதேசசபை ஊர் காவற்றுறை) ஆகியோரின் அன்பு மருமகனும், காத்தியா, ஜென்னி (ஆசிரியை), வைஸ்ணவி, Dr.பிரணவி, கீரன், மகிஷா, டினுஷன், சிவகௌரி, Dr.ஜனகன், ஜனனி (ஆசிரியை), அஜித் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், நயனி, மயன், மெலானி, சிவசங்கரி, ஹரி, தயந், சிந்து, குமரன், கௌசி, காயத்திரி, ஆகாஸ், ஆர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஆனது நாளை (19.06.2023) திங்கட்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக நாரந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.
T.P:077 651 3769

தகவல்:
திரு.திருமதி விக்கினேஸ்வரன்

(CS 25276)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேசன் கஜேந்திரன்



# ஓ(!)மந்தையில் ஞானம்

**2002** ஆனி மாதம்
ஏ-9 வீதியில் ஒரே தடல் புடல். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வாகனங்கள் 'உறுமல் பயம் போனதால்' விட்டுவிட்டு உறுமியபடி வந்து கொண்டிருந்தன.

வடக்கின் அழிவைப் பார்த்து ஆனந்தப் படவோ என்னவோ படையெடுத்திருந்த சிலர். குடுமியும் , லுங்கியும், ஜீன்சும் ஜம்பருமாக றோட்டோரம் சமையல் செய்து கொண்டிருப்பதை ஞானம் பார்த்துக்கொண்டிருந்தான். கொழும்பு , நீர்கொழும்பு, புத்தளம் என்று இடம்பெயர்ந்து , ஆறேழு வருடமாகச் சீவித்துக் தப்பியவர்கள், ஆசை ஆசையாக இனசனத்தையும் தங்களையும் தப்ப வைத்து விட்டு, ஊரை விட்டு வராமல் இருந்த ஊர்த்தெய்வங்களை பார்ப்பதற்காக "டொல்பின்" களில் கைகாட்டிக் கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள்.

இரண்டு பிள்ளைகளுடனும் , மனைவியுடனும் 'கேற் 'வாசலில் நின்றபடி ஆசையாகப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான் ஞானம். 95இல் இடம்பெயர்ந்து வன்னிக்கு போய் தாலிபாக்கியத்தால் வவுனியா நகருக்கு வந்தவன் தான் அவன்.

தாண்டிக்குளம் 'பாம் ஸ்கூலுக்கு'முன்னால் ஒரு புண்ணியவானின் இல்லத்தில் இரண்டு வருடங்களாகக் குடியிருக்கும் அவனுக்கும் 'அந்த' ஆசை வந்து விட்டது.

"இஞ்சரம்மா, நாங்களும் போவமாடியப்பா யாழ்ப்பாணம்? இங்கையிருந்தும் சில சனம் ஊருக்குப் போகத் தொடங்கிட்டுதுகளாம்"

"ஓமப்பா , எனக்கும் ஆசையத்தானிருக்கு, எங்கடை வீட்டிலை போய் இனசனம், அயலோடை இருக்க வேணும்"

"கொண்டலடிப் பிள்ளையாரைப் பார்க்க வேணும். ஸ்கொலர்ஷிப் பாஸ் பண்ணின ரண்டு பேரையும் யாழ்ப்பாணத்தில படிப்பிக்க வேணும்.தகப்பன் பேரன் படிச்ச பள்ளிக்கூடத்தில எங்கட தம்பியை, ஓ.எல் எடுக்க வைக்கோனும்.தங்கச்சியையும் வேம்படியில சேர்க்க வேணும். ஒரு பாறணையோட வெளிக்கிட்டனாங்கள் ஏழு வருஷமாக என்ர கொண்டலடிப் பிள்ளையாரைப் பார்க்கேல்லை" என்றாள் பிள்ளையாரின் பெரும்பக்தை.

ஞானத்தின் மனைவியைப் பற்றி சிறிது சொல்லித்தானாக வேண்டும். காரியசித்திமாலை, விநாயகர் அகவல், விநாயகர் கவசம் எல்லாம் அவளுக்கு அத்துப்படி. அவள் அடிக்கடி கட்டுகின்ற அறுகம்புல் மாலை, இரண்டு மறிக்குட்டிகளுக்குத் தாராளமாகப் போதும். வலிகாமம், வன்னிஇடப்பெயர்வுகள், சமாதானப் பேச்சுவார்த்தை, போர் நிறுத்தம், பாதைத்திறப்பு, எல்லாம் பிள்ளையாரின்ர விளையாட்டு என்பாள் அவள்.

பதிலுக்கு ஞானம், "அது பிள்ளையாரின்ர விளையாட்டு இல்லை, 'பிள்ளைகளின்' விளையாட்டு" எனச் சொல்லி கடுப்பேத்துவான்.

"வருகிற விநாயகர் சதுர்த்தியன்று இங்கையிருந்து யாழ்ப்பாணம் வெளிக்கிடுற மாதிரி பிளான் பண்ணுங்கோப்பா. அண்டைக்கு தம்பியின்ரை பதினாலாவது பேர்த்டேயும் வருகுதப்பா" என அறுகம்புல் மாலையைக் கட்டியபடி சொல்லிக்கொண்டாள்.

கொழும்புத் தினசரிகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் சென்று கொடுத்து விட்டு, குடாநாட்டுப் பத்திரிகளை எடுத்து வருகின்ற சிறிய 'எல்ப்' ரக வாகனம் ஒன்றை ஒழுங்குபண்ணியிருந்தான் ஞானம்.

ரேட்டும் அவனுக்குக் கட்டுப்படியாக இருந்ததுடன் இரண்டு வருடங்களாகச் சேர்த்த பொருள் பண்டங்களையும் அதில் கொண்டுபோகக் கூடியதாக இருந்தது.

விடியப்பிறம் 6.00 மணி வவுனியா புகையிரத நிலையத்திலிருந்த கொழும்புத் தினசரி களுடன் வாகனம் வாசலில் நின்றது. மல்லாவியில் இருந்து வவுனியாவுக்கு எடுத்துவந்த நாலு 'பாக்'குகளும் ஊதிப்போய்க் கிடந்தன.

இன்னும் இரண்டு மூன்று 'பாக்'குகளுடன் சமையல் பாத்திரங்கள் அடைந்த உரப்பைகளை ஞானத்தின் மனைவியும் வீட்டுக்கார அன்ரியும் 'எல்ப் ' வாகனத்தில் ஏற்றினார்கள்.

ஒன்பது இஞ்சி 'ப்ளாக் அண்ட் வைற்' ரீவி யை தம்பி அலாக்காகத் தூக்கிவைத்தான். புத்தகப்பைகளை மகள் இரண்டு தோள்களிலும் முதுகிலுமாக நாட்டாமையாட்டம் தூக்கி வந்தாள்.

வீட்டுக்கார அங்கிலும் ஞானமுமாகச் சேர்ந்து ஒரு மாதிரியாக 'செக்கண்ட் வராண்ட் ஜமாகாவையும் 'தம்பி தங்கச்சியினுடைய அரைச் சைக்கிள்களையும் வாகனத்தில் தூக்கி வைத்தாயிற்று. கொழும்புத் தினசரிகளும் பின்னால் வைக்கப்பட்ட பொருட்களும் தறப்பாளினால் போர்க்கப்பட்டன.

ஞானமும் மனைவியும் முன்சீற்றில். தம்பியும் தங்கச்சியும் மடிகளில். வீட்டுக்கார அன்ரியும் அழ, மனைவியும் அழ, மழையும் அழத்தொடங்கியது.

**நேரம் 8.30.**

பேப்பர் வாகனம் ஓமந்தை 'செக் பொயின்றில்' நிறுத் தப்பட்டது. ஒற்றைக் குளம்பு கொண்ட மந்தைகளைப் போல் கறுத்த பூட்ஸூடன் அங்குமிங்கும் அவர்கள் திரிந்தனர்.

"கெதியாகப் போயிட்டு , ஜீ.ஏ .பெர்மிற்றைக் கார்ட்டில் போட்டு, பதிவுகளையும் முடிச்சுக்கொண்டு வாங்கோ"

" 2.00 மணிக்குள்ள போனாத்தான் பூபாலசிங்கம் புத்தக்கடைக்காரர் எல்லா இடத்துக்கும் பேப்பர்களை அனுப்புவினம்" என்றார் வாகனக்காரர்.

...

" எங்க போறது மாத்தயா?"

"யாழ்ப்பாணம்"

"மொனவத வெட ?"

" மம குருவரய, வவுனியாட்ட ஸ்கூல் வெடகரண"

"ரெம்பறறி ட்ரான்ஸ்பர் இவறாய்"

'நவ் வீ ஆர் கோயிங் ஓன் பிளேஸ் "

ஒரு மாதிரியாக அந்த நாலு பேருக்கும் சொல்லி முடித்தான் ஞானம்.

"ஜீ.ஏ. மாத்தயா லெட்டர் இரிக்கா" ?

ஒரு காக்கிச் சட்டை அவனைப் பார்த்துக் கேட்டது.

அவனும் கொடுத்தான்.

"ஐ...யோ...மொனவத.?

ஜீ.ஏ. மாத்தயா சைன் போட்டிருக்கி . ஆனா பிராங்க் அடிக்கேல தானே. நீங்க பிழை விட்டிருக்கி. ஓடிப் போயிற்றி பிராங் போட்டு வாங்க...சரியா?"

அப்போது தான் ஞானமும் கடிதத்தைப் பார்த்தான்

ஜீ.ஏ.விளக்கமாகத்தான் கடிதத்தைக் கொடுத்திருந்தார். எடுத்துச் செல்கிற பொருட்களையும் விபரமாகக் குறிப்பிட்டு மிருந்தார்.

கையெப்பத்தையும் அழகாகத் தமிழில் இட்டுமிருந்தார். ஆனால் இறப்பர் முத்திரை குத்தப்படாமல் இருந்ததையிட்டு அவனது முகத்திலும் சிறிய பதற்றம் படர்ந்தது.

வேறுவழியில்லாமல் அவன் முழத்துக்கு முழம் "சேர்" போடத் தொடங்கினான்.

"சேர்...சேர் ... சொறி சேர்!

பேப்பர் வாகனக்காரன் சேர் திரும்ப வவுனியாவுக்கு போய் வரச் சம்மதிக்க மாட்டான். சேர் காசு கொஞ்சமெண்டு தான் இதப் பிடிச்சனான் சேர். வேற வாகனம் பிடிச்சுக்கொண்டு போக வசதியுமில்லை. பிளீஸ் சேர்..... பிளீஸ் சேர்...."

பேப்பர் வாகனக்காரன் சேர் திரும்ப வவுனியாவுக்கு போய் வரச் சம்மதிக்க மாட்டான். சேர் காசு கொஞ்சமெண்டு தான் இதப் பிடிச்சனான் சேர். வேற வாகனம் பிடிச்சுக்கொண்டு போக வசதியுமில்லை. பிளீஸ் சேர்..... பிளீஸ் சேர்...." "அப்ப சரி நீங்க மட்டும் பஸ்ஸில போய் பிராங்க் போட்டுகிட்டு வாறது .நோனாவும் வாகனமும் இங்க நிக்குறது .... வெலங்குதா ?" என்றான். ஞானத்துக்கு தூக்கி வாரிப்போட்டது

" அப்ப சரி நீங்க மட்டும் பஸ்ஸில போய் பிராங்க் போட்டுகிட்டு வாறது .நோனாவும் வாகனமும் இங்க நிக்குறது .... வெலங்குதா ?" என்றான்.

ஞானத்துக்கு தூக்கி வாரிப்போட்டது. வாகனக்காரனோ சாமான்களை இறக்கிவிடப் போவதாக சைகை காட்டுகிறான்.

ஞானத்தின் மனைவி காரிய சித்தி மாலையை முணுமுணுப்பதும் சாடையாகக் கேட்கிறது.

ஞானமும், ரோசத்தைக் கக்கத்தில் வைத்துவிட்டு, கைவிரல்கள் பத்தையும் ஒன்றோடொன்று சமாந்தரமாக வைத்து அவற்றுக்கு இடையிலான செங்குத்து தூரத்தைக் குறைக்கத் தொடங்கினான் .

" சரி, சரி பயப்பட வேணாங்.மல்லியை அனுப்பி சிகரட் வாங்கிட்டு வரச் சொல்லுங்க.சுறுக்காப் போகலாம்"

ஒரு நாளும் ஞானம் மகனை சிகரட் வாங்க கடைக்கு அனுப்பியதேயில்லை.

" தம்பி! பத்து சிகரட் போட்ட பக்கற் எண்டு வாங்கு தம்பி"

" இல்லையெண்டானெண்டா பத்து சிகரட் வாங்கி பேப்பர் ஒண்டில சுத்திக் கொண்டு வா தம்பி" மகன் மறுக்க, முறைத்துக் கொண்டு அனுப்பினான் ஞானம்.

மகன் வாங்கிக் கொண்டு வாறதை முட்கம்பி வேலிக்குள்ளால் கண்ட பிறகு தான் அவனுக்கு நெஞ்சுக்குள் தண்ணியே வந்தது.

" தம்பி!....வெள்ளம் நிக்குது வழுக்கும் கவனம்" மனைவி கூறிக்கொண்டாள்.

"நல்லங்...நல்லங். ஹொந்தாய் தெண்ட மல்லி"

நிலமும் வழுக்கி விட தம்பி கொண்டு வந்த சிகரட்டுக்கள் எல்லாம் தண்ணியில் மிதந்து தாழத் தொடங்கின.

விட்டான் அறையொன்று ஞானம் மகனின் கன்னத்தில்.

விறைத்துப்போய் நின்றார்கள் அந்த நாலுபேரும்.

அடித்த ஞானத்தின் கண்களுக்குள்ளும் வெள்ளம் தேங்கத் தொடங்கியது.

" பிரச்சனம் இல்லே... போட்டு வாங்க"

வாகனம் ஸ்ராாட் எடுக்கிற சத்தம் கேட்கிறது.

சிகரட் வாங்கி வரச் சொன்ன காக்கியை ஓரக்கண்ணால் பார்க்கிறான் ஞானம்.

ஞானத்தின் மனைவி கூறினாள்

' பாருங்கோப்பா... அந்த நாலு பேரும் வெக்கிப் போய் நிக்கிற மாதிரி இருக்கு. அவங்களும் மனுசர் தானே.

நல்ல நாளாப் பார்த்து தம்பியின்ர முகத்தைத்தான் பார்க்கேலாமல் கிடக்கு . இந்த நரகல் பழக்கம் உங்களுக்கும் இருக்கொண்டு கண்டுபிடிச்சு தானே அவங்களும் கேட்டிருப்பான்கள்.உந்த சிகரெட் பத்துறதை நீங்களும் இண்டையோட விட்டுத் துலையுங்கோப்பா"

" ஓம். ஓம்.... நானும் ஒரு முடிவு எடுத்துப் போட்டன். யாழ்ப்பாணம் போய்ப் பார்ப்பம்" என்றான் ஞானம்

வாகனம் புறப்படத்தொடங்கியது. ஓமந்தைப் பிள்ளையார் கோவில் மணி சதுர்த்திப் பூசைக்காக ஒலிக்கிறது.

" பிள்ளையார் விளையாட்டுக் காட்டிப் போட்டார்" என்றாள் மனைவி.



சஞ்சீவி சிறுகதை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தமிழர்களை பௌத்தர்களாக உருவாக்கி , அவர்களை சிங்களவர்களோடு கலப்புற வைத்து, அதன் மூலம் பௌத்த சிங்களப் பரம்பலை விரிவாக்குதல். அதாவது வடக்கு , கிழக்கில் விகாரைகள் அமைத்தால் பௌத்த துறவியை இறை சேவைக்கு அமர்த்துவார்கள் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றி. பௌத்த - சிங்கள பிரதேசமாக அந்தப்பகுதி மாற்றமடையும். தமிழர் என்ற இனம் பௌத்த சிங்களத்துக்குள் கரைந்து காணாமற்போய்விடும்.

# இனவாதிகளின் கனவுக்கு தூபமிடும் கும்பல்கள்

○ எஸ்.பிரஜீவன்ராம்

இலங்கைத் தமிழ்த்தேசிய அரசியலில் அண்மைக்காலமாக மத அடிப்படைவாதம் வலுவடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. மதம் என்று கூறும்போது, 'யானைக்கு மதம் பிடித்தால் அது காட்டை அழித்துவிடும். அதுபோல் மனிதனுக்கு மதம் பிடித்தால் நாட்டை அழித்துவிடுவான்' என்ற வரிகள் மனத்துக்குள் எழுவதைத் தவிர்க்கமுடியாது. இன்று தமிழ்த்தேசிய அரசியலில் தீவிர மதவாதிகளின் ஊடுருவல் ஒரு புறம் இருக்க , சாதியக் கட்டமைப்பை தகர்க்க இந்து மதத்தை துறந்து பௌத்த மதத்தினை தழுவ வேண்டும் எனக் கூறி, தமிழ்த்தேசியத்தை சிதைப்பதை நோக்கமாகக் கொண்டு ஒரு குழு செயற்பட்டுவருவதை அவதானிக்க முடிகின்றது. அந்தக் குழுவின் உண்மை நோக்கினை வெளிப்படுத்துவதாகவும் இவ்வாறான குழுக்களை பின்தொடர்வதால் ஏற்படும் விளைவுகள் குறித்து தெளிவுபடுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

இன்று தமிழ்த்தேசியத்தில் இந்துமதவாதம் /சைவ மதவாதம் வலுவடைந்துவருவதை அவதானிக்க முடிகின்றது. இந்தியாவில் இந்து சமயத்தின் ஒரு கூறாகவே சைவ சமயம் காணப்பட்டாலும், இலங்கையில் அப்படியான பிரிவினைகள் இல்லை. சைவம் என்றால் இந்து , இந்து என்றால் சைவம் என்ற நிலையே இலங்கையில் உண்டு. குறிப்பாக வடக்கு மக்களில் பெரும்பான்மையான மக்கள் சைவமதத்தினைப் பின்பற்றுபவர்களாக காணப்படுகின்றனர். வடக்கில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் வாழுகின்ற போதிலும் அவர்களுக்குள் முரண்பாடுகள் ஏற்படவில்லை. காரணம் வடக்கில் உள்ள கிறிஸ்தவர்களும் இந்துக்களும் ஒரு தாய் மக்களாகவே காணப்படுகின்றனர்.

அதேபோல் கிழக்கில் முஸ்லிம் மக்களுடன் முன்னைய காலங்களில் சில மனக்கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றாலும் தற்போது அவர்களுடனான உறவு வலுப்பெற்றுவருவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் தற்போது உயர்சாதியக் கருத்தியலை எதிர்க்கிறோம் எனக் கூறிக் கொண்டு ஒரு குழு தமிழர் அரசியல் பரப்பில் உள் நுழைந்துள்ளது. இவர்கள் 'தம்மை சாதி ரீதியாக உயர்ந்தவர் என எண்ணும் மனப்பாங்கு உடையவர்களே எங்களின் எதிரிகள்'என்கின்றனர். சாதிய ரீதியான ஒடுக்குமுறை எந்தச்சமூகத்தில் காணப்பட்டாலும் அது நிச்சயம் களைந்தெடுக்கப்பட வேண்டியதே, அதையாராலும் மறுக்கமுடியாது. ஆனால் தற்போது சாதியத்தை எதிர்க்கின்றோம் எனக் கூறும் இந்தக் குழுவினரின் உண்மையான நோக்கம், இவர்கள் கூறுவதைப்போல உயர் சாதியக் கருத்தியலை எதிர்ப்பதா அல்லது தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை உருவாக்கி அதன் மூலம் தமிழ்த்தேசிய அரசியலை சிதைப்பதா ? என்ற கேள்வி எழுந்துள்ளது. 'உயர்சாதியக் கருத்தியலை எதிர்க்கும் மனப்பாங்கு உங்கள் மனதில் உதயமானால் நீங்கள் இலங்கையில் பெரும்பான்மை இனமக்கள் பின்பற்றும் பௌத்த மதத்தினைப் பின்பற்றுங்கள். அதன் மூலம் சிங்கள மக்களின் ஆதரவுடன் உயர்சாதியக் கருத்தியல்வாதிகளை எதிர்க்கலாம்' என்று இவர்கள் சொல்லும் 'புதியவழிமுறைதான்' இந்தச் சக்திகள் மீதான சந்தேகத்தை இன்னும் அதிகப்படுத்துகின்றது. இதன்மூலம் , தமிழர்கள் தங்கள் கையாலேயே தம்மை அழிப்பதற்கான நிலையைத்தான் உருவாக்கும் முயற்சி என்பது தெளிவாகின்றது. இவர்கள் கூறுவதைப் போல மதமாற்றம் மூலம் சாதிய வேறுபாட்டைக் களையலாமா? என்ற கேள்விக்கு , பதில் 'இல்லை' என்பதாகவே அமையும். இதற்குச் சிறந்த உதாரணம் , பௌத்த மதத்தினைப் பின்பற்றும் சிங்கள மக்கள் தான். பௌத்த மதத்தினைப் பின்பற்றுவதால் சாதிக்கட்டமைப்பு அவர்கள் மத்தியில் தகர்க்கப்பட்டு விட்டதா ? இல்லையே. இன்றும் சிங்கள மக்கள் மத்தியில் சாதியக் கட்டமைப்பு பலமாகவே காணப்படுகின்றது.

'மதமாற்றம் மூலம் சாதிய வேறுபாட்டைக் களையும்' தங்களது கருத்தியலுக்கு வலுச்சேர்க்க அம்பேத்கரை இவர்கள் துணைக்கு அழைக்கின்றனர், இந்திய அரசியலை முன்னுதாரணமாக்க முற்படுகின்றனர். இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் என்பது இந்திய அரசியலை காட்டிலும் முற்றிலும் மாறுபட்டது. காரணம் , எம் அரசியல் தமிழ்மக்களின் உரிமையை மையப்படுத்தியது. அத்தோடு இந்தியாவில் சாதிய ஒடுக்குமுறையை இல்லாதொழிக்க அம்பேத்கர் பௌத்த மதத்துக்கு மாறியதால், அங்கு சாதியக் கட்டமைப்பு இல்லாதாக்கப்பட்டு விட்டதா ? இலங்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தியாவிலேயே அதிதீவிர சாதிய வேற்றுமையும், சாதிக்கொடுமைகளும் தலைவிரித்தாடுகின்றன. அப்படியானால் மதமாற்றத்தின் மூலம் சாதியக் கட்டமைப்பைத் தகர்க்கலாம் என்ற உணர்வை தமிழர் மத்தியில் சிலர் விதைக்கத் தொடங்கியிருப்பதற்கான காரணம் என்ன?

அதனை விளங்கிக்கொள்ள வரலாற்றின் பக்கங்களிலேயே நிறைய உதாரணங்கள் உள்ளன. ஆங்கிலேயரும், இஸ்லாமியரும் ஆரம்பத்தில் தமது மதத்தினை இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் விதைப்பதற்கு வறுமை மற்றும் சாதிய வேறுபாடு போன்ற காரணிகளையே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். மக்களை அழைத்து மதம் மாறினால் பல சலுகைகள் தருவதாகவும், சாதியக் கட்டமைப்பைத் தகர்க்கலாம் என்றும் கூறினர். இன்று 200 வருடங்களைக் கடந்தும், சாதியக் கட்டமைப்பை இந்த மதமாற்றம் சாத்தியப்படுத்திவிட்டதா? மதம் மாறியவர்கள் கூட சாதியத்தை இறுகப்பற்றியிருக்கின்றனரே தவிர, அதனை ஒழிக்கவில்லை. மதமாற்றத்தை வலியுறுத்திய அதே அந்நிய ஆட்சியாளர்களே, பின்னர் தமது இருப்பினைத் தக்கவைக்க சாதிய அடிப்படையில் பதவிகளை வழங்கி, சாதிய வேறுபாட்டை இன்னும் ஊக்குவித்தனர். அப்படியானால் ஏன் பௌத்த மதத்தை தமிழர்கள் பின்பற்றினால் சாதிக்கட்டமைபைத் தகர்க்கலாம் என்று ஒரு கும்பல் கூவத்தொடங்கியிருப்பதன் பின்னணி என்ன? தமிழர்களை பௌத்தர்களாக உருவாக்கி , அவர்களை சிங்களவர்களோடு கலப்புற வைத்து, அதன் மூலம் பௌத்த - சிங்களப் பரம்பலை விரிவாக்குதல். அதாவது வடக்கு ,கிழக்கில் விகாரைகள் அமைத்தால் பௌத்த துறவியை இறை சேவைக்கு அமர்த்துவார்கள் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றி, பௌத்த சிங்கள பிரதேசமாக அந்தப்பகுதி மாற்றமடையும். தமிழர் என்ற இனம் பௌத்த - சிங்களத்துக்குள் கரைந்து காணாமல் போய்விடும்.

ஒட்டு மொத்த நாட்டையும் பௌத்த நாடாக மாற்றலாம். தமிழர்கள் பௌத்தர்களாகிவிட்டால், எங்கும் எப்போதும் விகாரைகளை அமைக்கலாம், புத்தர் சிலைகளை வைக்கலாம். இலங்கையில் பௌத்த வழிபாடுகள் சிங்களத்தையே மையமாகக் கொண்டிருப்பதால், பௌத்தத்தை தழுவிக் கொள்ளும் தமிழர்களும் மெல்ல மெல்ல சிங்களவர்களாக மாறுவர். ஒரே நாடு, ஒரே மதம், ஒரே இனம் என்ற சிங்களப் பேரினவாதிகளின் கனவு இதனூடாக நனவாகும். இதற்காகவே இந்தக் கும்பல் இப்படிக் கூலிக்கு கூவத்தொடங்கியுள்ளது. மற்றும்படி வர்க்க சாதிய, வர்க்க வேறுபாடுகளைக் களைவதென இந்தக் கும்பல் சொல்வதெல்லாம் தங்கள் சதித்திட்டத்தை உருமறைக்கும் உத்தியேதவிர , வேறொன்றுமில்லை. ■

சஞ்சீவி காத்திருக்கிறது.
நீங்களும் எழுதலாம்
• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்
• துணுக்கு
அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com
077 316 5555
அனுப்பி வைக்கலாம்.

# என் தாயவள்

- பர்மினி


கருத்தாங்கிய என்னை
கரங்களில் ஏந்தி
கனவுகளுடன் பெயர் சூட்டி
மகிழ்ந்த என் மாதா

சிரம் தாழ்ந்து என்
கவலைகள் கண்ணீராகும் போது
மார்புடன் எனை வருடி
மனதில் அவள் முகம் பதித்தாள்

அன்பின் எல்லையாய்
உயிர் தந்த உருவமாய்
உதிரத்தின் உறவாய்

என் அன்னையாய் அவள்
அன்பினில் வளர்ந்து
அன்னையைத் தளர்ந்து
உருண்டோடிய காலமதில்
'அம்மா' என் ஏங்க வைத்த என் தாயவள்

ஊட்டிய உன் கரங்கள் அன்றி
நானாக ஊணைப் பற்றும் போது
உன் கரங்கள் அற்ற குறையை விட
உன் நினைவால் உதிரம்
வழியும் விழியைத் துடைக்க நீ இல்லாது அழுத
என் இதயம் உணர்ந்த உன் அன்பிற்கு இணை
இல்லை இவ் அவனியில்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஏழாலை எனும் பெயர் உருவாகக் காரணமான ஏழு ஆலயங்களில் ஒன்றான ஏழாலைச் சிவன் என அழைக்கப்படும் ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுச் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இவ் ஆலய மஹோற்சவம் இடம்பெறும். (ஓ-66)


## வேலையாட்கள் தேவை

யாழ். மானிப்பாய் பகுதியில் கொத்து, றைஸ் போடக்கூடியவர், உணவு பரிமாறுபவர், உதவியாட்கள் தேவை (ஆண், பெண்)

தொடர்பு: 074 024 1688


## பாத யாத்திரை சென்றடைவு

வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கடந்த மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை ஆரம்பமான கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்கான பாதயாத்திரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் கதிர்காமத்தைச் சென்றடைந்துள்ளது.

இந்த வருடப் பாதயாத்திரையில் யாழ்.மாவட்டம் உள்ளிட்ட வடக்கின் பல பகுதிகளையும் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட அடியவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

பாதயாத்திரைக் குழுவினர் கடந்த 12 ஆம் திங்கட்கிழமை ஏனைய பாதயாத்திரைக் குழுவினருடன் இணைந்து கதிர்காமம் காட்டுப் பாதை ஊடாக கதிர்காமத்தைச் சென்றடைந்தனர்.

கதிர்காமத்தில் அமைந்துள்ள புனிதமான மாணிக்க கங்கையில் நீராடிய பாதயாத்திரைக் குழுவினர் பின்னர் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கொண்டு சென்ற வேலைக் கதிர்காமக் கந்தன் ஆலயக் கப்புறாளையிடம் கையளித்து பூசைக்காக வேல் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாளை திங்கட்கிழமை கதிர்காமக் கந்தன் ஆடிவேல் உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ஓ-66)







கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தின் நுழைவாயில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் அதிபர் நா.கருணாகரன் தலைமையில் இடம் பெற்றது

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதல்வர் ச.லலீசன் கௌரவ விருந்தினராக லண்டன் வாழ் பழைய மாணவரும் சமூக ஆர்வலருமான அ. செல்வராசா ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர் (ஓ-159)


## தேவை

யாழ். நகரத்தில் வசிக்கும் வயோதிப தாயாருடனும் அவரது மாற்றுத்திறனாளியான மகனுடனும் நிரந்தரமாக தங்கி வசிப்பதற்காக அன்புள்ளம் கொண்ட தாய் மற்றும் கல்வி கற்கும் நல்ல பிள்ளையுள்ள குடும்பத்தினை தேடுகின்றோம். அவர்களுக்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

076 269 4685

## வேலை ஆட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் வர்த்தக நிலையத்திற்கு பொதியிடல் மற்றும் களஞ்சியப்படுத்தல் வேலைக்கு 18 -35 வயது எல்லைக்கு உட்பட்ட ஆண்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 991 4945


## மரண அறிவித்தல்

### நற்குணராசா குகதீஸ்



கரம்பைக்குறிச்சி மேற்கு, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நற்குணராசா குகதீஸ் (பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட முதலாம் வருட மாணவன்) நேற்று முன்தினம் (16.06.2023) வெள்ளிகிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் நற்குணராசா, காலஞ்சென்ற சாந்தகுமாரி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், சாளினி (ஆசிரியை - வரணி மத்திய கல்லூரி), வரகாஸ்மன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் முள்ளி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னர் கோபாலபிள்ளை

**(தர்மகர்த்தா வேவில் கந்தசாமி கோவில்)**

தோற்றம்: 22.08.1942 மறைவு: 17.06.2023



கண்டாவளையைப் பிறப்பிடமாகவும், மடத்தடி வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் கோபாலபிள்ளை அவர்கள் நேற்று (17.06.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகப்பா சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பாறுபதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கோணேஸ்வரன், கோணேஸ்வரி, கோணறஞ்சன் (ஆசிரியர் - யா/புற்றளை மகா வித்தியாலயம்), கோணறஞ்சினி, கோகதீஸ்வரன் (ASRIYA), கோடீஸ்வரன், நாகேந்திரன், கோகிலகாந்தன் (அமெரிக்கா), கோகிலபவன் (தொல்லியல் திணைக்களம்- யாழ்ப்பாணம்), கோகிலவதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது கொடிகாமத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் வேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொடிகாமம் வடக்கு, கொடிகாமம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சிங்கர் நிறுவனத்தினால், லிமா எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள் அறிமுகம் செய்யும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது. இதன்போது, சிங்கரின் நீண்டகால வாடிக் கையாளர் ஒருவருக்கு எலக்ட்ரிக் மோட்டார்சைக்கிளின் திறப்பு வழங்கப்பட்டது. நிகழ்வில், சிங்கர் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், விற்பனைப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். மோட்டார்சைக்கிள் பற்றியும் அதை லீசிங்கில் பெற்றுக்கொள்ளல் மற்றும் விற்பனைக்குப் பின்னரான சேவை பற்றியும் நிகழ்வில் தெளிவுபடுத்தப்பட்டது. (ம-26)




கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் 50 ஆவது வருட நிறைவை முன்னிட்டு, கடந்த வியாழக்கிழமை கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் குருதிக்கொடை முகாமொன்று முன்னெடுக்கப்பட்டது. (ச-66)




கொடிகாமம் அரசினர் வித்தியாலய நிர்வாகத்தின் கோரிக்கமைய, மீசாலை அறக்கட்டளையால் மாணவர்களுக்கு கற்றல் பயன்பாட்டுக்கான கணினித்தொகுதி அண்மையில் கையளிக்கப்பட்டது. (ச-27)



கிளிநொச்சி, கல்மடுநகர் நாவல்நகர் கிராமத் தில் வெள்ளம் வழிந்தோடுவதற்கு ஏதுவான வகையில், கழிவு வாய்க்கால் அமைப்பு ஏற்ப டுத்தப்பட்டுள்ளது. கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் சண்முகம் ஜீவராசா தனது சொந்த நிதியிலிருந்து இந்த வெள்ள வாய்க்கால் கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுத் துள்ளார். (ம-113)




சீனாவால் மானியமாக வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் தென்மராட்சியிலுள்ள 88 கடற்றொழிலாளர்களுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தினூடாக இல வசமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. (ச-159)



புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்திலுள்ள ஆலடிச் சந்தி பிள்ளையார் கோயிலின் இரண்டு நன்னீர்க் கிணறுகள் சூழகம் அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் சுத்தம் செய்யப்பட்டன. (ச)



மீசாலை வடக்கு அருள்மிகு இராமாவில் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அடிய வர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றது. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறவிடப்பட்டது


நேற்று (17.06.2023) யாழ்ப்பாணம் - கண்டி போக்குவரத்துச் சேவையில் பயணிக்கும் பொழுது வவுனியா - கிளிநொச்சிக்குமிடையில் பெறுமதிமிக்க புத்தகப்பை மற்றும் அடையாள அட்டை, தாதிய சேவை அடையாள அட்டை உட்பட முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை தவறவிடப்பட்டுள்ளது.

**இ. கலைவாணி - 198567802875**

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 531 2631**

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 . 05 . 1963

மறைவு 16 . 07 . 2015

### திரு. நந்தகுமார் இராசலிங்கம்

திதி: ஆனிமாத பூர்வபக்ஷ பிரதமை (18.06.2023)

அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அப்பாவே!
உங்கள் பாசமான முகம் பார்த்து எட்டு ஆண்டுகள் ஆனதோ
உங்கள் முகம் காண இன்றுவரை பரிதவித்து நிற்கின்றோம்
எங்கள் நிழல் எங்கள் கூடவே வருவது போல
உங்கள் புன்னகை பூத்த முகம் எங்கள் நினைவில்
என்றுமே மறையாது
எங்கள் இதயங்களில் நாம் வாழும் காலம் வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 01 . 1948

மறைவு 17 . 06 . 2023

### பாலசுப்பிரமணியம் பவளமலர்

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வங்களாலேன், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பால சுப்பிரமணியம் பவளமலர் நேற்று (17.06.2023) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற மல்லாகம் ப.நோ.கூ.ச.எரிபொருள் நிரப்புநிலைய முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரவணபவானந்தம் (சாரதி இ.போ.சபை) மற்றும் புஸ்பராணி, மகாலக்சுமி, மனோரஞ்சிதன் (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி), ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்ஷினி, நிறைஞ்சினி (பிரான்ஸ்), தாட்சாயினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவராசா, சுதஸ்கரன் (லண்டன்) அகியோரின் பாசமிகு மாமியாரும், சேகயன் (தென்கிழக்கு, பல் கலைக் கழகம்), பிரசாத் மற்றும் இளங்குமரன், தனுஷா (யூனியன் கல்லூரி, மாணவர்கள்) ஆர்த்தி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மல்லாகம் வங்களாலேனில் உள்ள இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 383 5499**

(cs 50869) (2.6)

## WE ARE HIRING !

**Telecom Rigger Technician**

ටෙලිකොම් රිගර්

டெலிகொம் றிகர்

**Salary : Rs.100,000/-**

*For Special Project*

submit your CV :
careers@mobizzengineering.lk
Whatsapp: 071-8644615

MOBIZZ MOBIZZ ENGINEERING

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு வேலையாட்கள் தேவை.

1)விற்பனை பிரதிநிதி (Sales Representative)
2)விற்பனை உதவியாளர் (Sales Assistant)
3)சாரதி (Driver)
4)இணையத்தள விற்பனையாளர்
( Online Marketing செய்க்கூடியவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**077 120 8482**

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு, வற்றாப்பளை மெயின் வீதியிலிருந்து வற்றாப்பளை அம்மன் கோயிலுக்குச் செல்லும் பாதையில் உள்ள 12 பரப்புக் கடை கட்டக் கூடிய மேட்டுக்காணி விற்பனைக்குண்டு.

**071 856 2098**
**076 282 2904**

(CS/25260) AH-1

## வேலை வாய்ப்பு

எமது Wins Home Care Service (Pvt) Ltd நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களுக்கும் முகாமைத்துவம் தெரிந்த அல்லது அனுபவமுள்ள மோட்டார் சைக்கிள் வைத்திருக்கும் பெண் ஊழியர்கள் உடன் தேவை.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் துப்புரவு பணி செயற்பாடுகளை மேற்பார்வை செய்து, கொண்டு நடத்தக்கூடிய மோட்டார் சைக்கிள் வைத்திருக்கும் ஆண் அல்லது பெண் ஊழியர் உடன் தேவை.....

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்

தொடர்பு:
**077 6664438, 076 099 3034**

(cs.25268) (N-1)

## Polycrome®

*Light the future*

Polycrome 40 YEARS

### விற்பனை பிரதிநிதிகள்
### (SALES REPRESENTATIVES)

ISO தரச் சான்றிதழ் உடைய முன்னணி உள்நாட்டு மின் உபகரண உற்பத்தி நிறுவனத்தின் மாத்தறை, காலி, களுத்துறை, குருநாகல, கண்டி, கம்பஹா, நீர்கொழும்பு, அநுராதபுரம், கொழும்பு, கல்முனை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மேற்கூறிய பதவிக்கான வெற்றிடங்கள் உள்ளன

- க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தி
- இலக்ட்ரிக்கல் மற்றும் ஹார்டுவேர் துறையில் குறைந்தபட்சம் 2 வருட விற்பனை அனுபவம்
- விற்பனை இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கான சிறந்த திறன்
- மோட்டார் சைக்கிளுடன் செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் உரிமம் கொண்டிருத்தல்

இத் சந்தை துறையில் உயர்வான மற்றும் கவர்ச்சிகரமான சம்பளம் உட்பட பிற சலுகைகள்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு 7 நாட்களுக்குள் அனுப்பவும்.

மனித வளங்கள் மற்றும் நிர்வாக மேலாளர்
பொலிகுரோம் இலெக்ட்ரிகல் இன்டஸ்ட்ரீஸ்
[illegible] லிமிடெட்
[illegible] 10, பொரலஸ்கமுவ
careers@polycrome.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாட்டும் வெப்பம் இளநீருக்கு மவுசு

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்.குடாநாட்டில் செவ்விளநீருக்கு பெரும் கிராக்கியும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலவும் கடும் வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக அவற்றின் நுகர்வு அதிகரித்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஒரு செவ்விளநீர் 200 ரூபா முதல் 250 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. அதேவேளை தென்பகுதியிலிருந்து செவ்விளநீர் கூடுதலாக தென்பகுதியிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு எடுத்துவரப்படுகின்றது. (ச-17)

## மாதச் செலவு ரூபா 76,124

கொழும்பு, ஜூன் 18

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் 2023ஆம் ஆண்டுக்கான சமீபத்திய அறிக்கைகளின்படி, இலங்கையில் குடும்பமொன்றின் மாதாந்தச் செலவு இவ்வருடம் 76 ஆயிரத்து 124 ரூபாவாக அதிகரித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்தார். கணக்கெடுப்பு தரவுகளின்படி, கடந்த வருடம் இலங்கையில்ஒருகுடும்பத்தின்மாதாந்தச்செலவு சுமார் 63 ஆயிரத்து 820 ரூபாவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஓ.இ)

## மணமகன் தேவை

1982 ரேவதி, கி.பா.7, BA பட்டதாரி அரச தொழில் புரியும் விவாகரத்து மணமகளுக்கு மணமகன் தேவை.

**077 5452 892**

## பணிப்பெண் தேவை

கச்சாய் சந்தியை அண்மித்த வீட்டுக்கு வேலைகள் தெரிந்த பணிப்பெண் உடனடியாகத் தேவை

**074 209 6764**

## மணமகள் தேவை

UK, PR உடைய 1985 ஆணுக்கு (விவாகரத்து) விசாகம் 4ம் பாதம் மணமகனுக்கு ஆங்கில அறிவுடைய மணமகள் தேவை.

**077 484 4856, 077 602 7147**

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல புத்தக விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

1)விற்பனை பிரதிநிதி (ஆண்/ பெண்)
2)உதவியாளர் (ஆண்/ பெண்)

**077 4949 683, 077 0776 469**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கட்டப்பிராயில் நி.ப: 1 1/2 2 குழி காணி விற்பனைக்குண்டு. (ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.)

தொடர்பு: **074 254 3759**

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

உயர்ரக German Shepherd (KASL Registered) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**077 809 4474**



# புங்குடுதீவு கிழக்கு, கண்ணகைபுரம்
# கண்ணகை அம்பாள் என வழங்கும்
# ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
# மகா கும்பாபிசேக பெருவிழா

## 25-06-2023 ஞாயிற்றுக்கிழமை
## காலை 9.37 மணிக்கு

ஈழத் திருநாட்டின் யாழ் மாவட்டத்தில் சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவில் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள், கண்ணகை அம்பாள், பத்திரகாளி அம்பாள் ஆகிய முத்தேவியருக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் **நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆனித் திங்கள் 10ம் நாள் (25-06-2023) ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தர தினத்தன்று காலை 9.37 மணிக்கு ஏகோன்ன பஞ்சாசத் (49) குண்டபக்ஷ மஹாயாக மஹா கும்பாபிஷேகம்** நடைபெற திருவருள் கூடியுள்ளது.

**கிரியை ஆரம்பம்**
**19-06-2023 திங்கட்கிழமை**

**எண்ணெய்க் காப்பு**
**22,23,24,-06-2023**
**வியாழன், வெள்ளி, சனி**

## கும்பாபிஷேகம் 25-06-2023 ஞாயிற்றுக்கிழமை

"இந்து மகா சமுத்திரத்தின் பேரலைகள் தாலாட்ட
வந்து குடிகொண்டாள் தேவி பூவரச மரநிழலில்
வெந்து நீறாக மதுரையை எரித்த கண்ணகையாள்
சிந்தை மனங்குளிர குடமுழுக்கு காண வாரீர்"

**அன்னையின் பேரருளினை பெற்றுய்ய அனைவரும் திரண்டு வாரீர்!!!**

**ஆலய பரிபாலன சபையினர் – ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், புங்குடுதீவு 10**

**WOODLANDS HOTEL**
PURE VEGETARIAN
No. 192, 4th Cross Street, Colombo-11.
Tel: 0112 472142
Fax: 0112 541879

**SUNRISE TRADERS**
No. 178, Central Road, Colombo-12
Tel: 0112 330 626, 0112 343 599

**ALPNA (PVT) LTD**
LG1, People's Park Shopping Complex, Colombo - 11.
Tel: 0112 337521

**Om Saravana Co.**
No. 229, 5th Cross Street, Colombo-11.
Tel: 0112 435168, 0112 433864

**RAVI LANKA TRADES**
No. 216, Bodhiraja Mawatha, Colombo-11. Tel: 0112 423047

**ARKAY INDUSTRIES**
No. 214, Avissawella Road, Orugodawatta, Wellampitiya.
Tel: 0112 5333436, 0112 533438

**R.K. INDUSRIES PVT LTD**
No. 61/2, Ettampolawatta, Handala, Wattala.
Tel: 0014 015393, 0112 946490

**VEMAAL CO. (PVT) LTD.**
No. 72, Wolfendhal Street, Colombo-12.
Tel: 0112 336565

**SUNRISE INN**
No. 176, Central Road, Colombo-12
Tel: 0112 320 499, 0112 323 597

**RAJESWARY TRADERS**
No. 208, Prince Street, Colombo-11.
Tel: 0112 324 092

**UTHAYA AGENCY**
No. 111, 4th Cross Street, Colombo-11.
Tel: 0112 422584, 0112 437018

**E. SITTAMPALAM & SONS**
No. 223, 5th Cross Street, Colombo-11.
Tel: 0112 435917, 0112 326587

**AMILEX**
AMILEX (PVT) LTD
No. 222, Bodhiraja Mawatha, Colombo-11.
Tel: 077 4000 657

**MERCURY**
TRADING COMPANY
No. 203, Keyzer Street, Colombo-11.
Tel: 2447660, 2472058

**NEW RAAMSETHU & Co**
No. 65, 4th Cross Street, Colombo-11.
Tel: 0112 323686, 0112 380374

**KAMAL TRADING & CO**
No. 221, 5th Cross Street, Colombo-11.
Tel: 2458814

**RAJAN AGENCEY**
No. 189, 5th Cross Street, Colombo-11.
Tel: 320331, 2384331, 2437331

**S.P.KARUN STORES**
No. 276, Keyzer Street, Colombo-11.
Tel: 0112 439970

**WEERAMYLAN**
WEDDING HALL
No. 146, Sri Kathiresan Street, Colombo-13.
Tel: 0112 473020

**VINAYAGAR STORES**
No. 95, 4th Cross Street, Colombo-11.
Tel: 0112 441085, 0112 445311

**CARE LINK**
No. 78, 4th Cross Street, Colombo-11.
Tel: 2458222, 2458223

**GEORGE & COMPANY**
No. 76A, 4th Cross Street, Colombo-11.
Tel: 2325973

**SRI THURKKA ENTERPRISE**
No. 133, 5th Cross Street, Colombo-11.
Tel: 0112 384757

**RAJAH STEEL CENTRE**
No. 320, Old Moor Street, Colombo-12.
Tel: 0112 459864

**SHIVARAM STORES**
No. P253, Keyzer Street, Colombo-11.
Tel: 2330177

**NEW VIKNA LANKA**
No. 112, 4th Cross Street, Colombo-11.
Tel: 0112 332329

**KUMARAVEL COY.**
No. 217, 5th Cross Street, Colombo-11.
Tel: 2421057, 2435669



**SOORYAA TRADERS**
No. 215-B, Prince Street, Colombo-11.
Tel: 0112 380926

**M. MUTHIAPILLAI**
No. 06, Sri Kathiresan Street, Colombo-13.

**AINKARAN'S TRADING**
No. 21, St. John's Road, Colombo-11.
Tel: 0112 458780



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ர் முன்னாள் கௌரவ பொதுச் செயலாளரும், சிரேஷ்ட விரிவுரையாளரும்,
# பின் இயக்குநரும் வெற்றித்தேர்வு வெளியீடுகளின் பிரதம ஆசிரியருமான
# புவனேஸ்வரன் அவர்களின்
# விழா மலர்



## அதிமேதகு ஜனாதிபதியின் மேலதிக செயலாளரின் வாழ்த்துச் செய்தி

திரு. சரா. புவனேஸ்வரன் ஆசிரியராகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினுடைய பொதுச்செயலாளர் ஆகவும் பொதுப் பணியாற்றி தற்போது ஒய்வுபெற்று மணிவிழாக் காணும் அவர் களிற்கு மணிவிழா வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் தொழில் சங்க கடமைகளின் போது மாணவர்கள் நலனில் அதீத அக்கறையுடன் கூடிய தொழில் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டமையினை நான் வட மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த கால கட்டத்தில் நன்கறிந்திருந்தேன். குறிப்பாக அரச நிர்வாகத்தின் கடமைகளின் பொறுப்புக்களை உணர்ந்தவாராகவும் அதே நேரத்தில் தொழிற்சங்க நடவடிக்கையாக தன்னுடைய அங்கத்தவர்களுடைய நலன் சார் நடவடிக்கைகளையும் ஒரு சமாந்தரமாக நடாத்திச் சென்றமையும் கல்விச் சமூகம் என்ற வகையில் எதிர்கால சந்ததியினரை உருவாக்குகின்ற பணிகளில் இருக்கின்ற ஆசிரியர்களினுடைய பணியை கௌரவிக்கின்ற அந்த நடைமுறையோடு மாணவர் களை முழுமையாக கல்வி மட்டுமின்றி கல்விக்குப் புறப்பான நடவடிக்கைகளையும் மற்றும் சமூகத்திலே ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் இந்நாட்டினுடைய சிறந்த குடிமகனாக மாற்றுகின்ற வகையிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களினுடைய நலன்களைப் பேணிக்கொண்டு அதே போன்று நிர்வாக ரீதியாக பல்வேறு தடங்கல களிற்கு மத்தியில் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களுடைய விசேட தேவைகளை உணர்ந்து அதன் அடிப்படையில் தன்னுடைய ஆக்கபூர்வமான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டமையினை அறிந்தவன் என்ற வகையில் இந்த வேளையில் வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

**இ.இளங்கோவன்,**
மேலதிக செயலாளர், ஜனாதிபதி செயலகம்.



## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராகவும் பதவி வகித்த திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் இவ்வேளையில் அவரது ஓய்வுக் காலம் ஒளிமயமானதாக அமைய வேண்டுமென வாழ்த்தி இச்செய்தியை வரைவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். திரு. சரா. புவனேஸ்வரன் சிறந்த குருவுக்கான எல்லா அம்சங்களையும் கொண்டிருந்தார். அவரது தோற்றம் மிகவும் கம்பீரமானது. காண்பவரின் கவனத்தை ஈர்த்திருக்கவல்லது. அவரது கிருபையும் நல்லாசிகளும் பல சந்ததி மாணவர்களைச் சான்றோர்களாக்கியது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக அவர் செயற்பட்ட காலங்களில் மிகச் சிறந்ததொரு தொழிற்சங்கவாதியாக மிளிர்ந்ததை நாம் எல்லோரும் நன்கறிவோம். ஆசிரியர்களின் உரிமைக்காகவும், அவர்களுக்கான நலன்களைப் பெற்றுக் கொடுப் பதற்காகவும் அவர் தன்னைத் தியாகம் செய்தார். தன்னால் இயலுமானவரை அர்ப் பணிப்புடன் செயற்பட்டார். பாடசாலை மாணவர்களை மாத்திரமல்லாமல் மாணவர் களை வழிப்படுத்தும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பேறுபெற்ற ஒரு சிலருள் திரு. சரா. புவனேஸ்வரனும் ஒருவர் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை எனினும், அவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலும், எமது பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி டிப்ளோமாக் கற்கை நெறி முதல் அணி மாணவனாகப் பயின்ற காலத்திலும் நான் அவரை நன்கறிவேன். அவர் ஆசிரியராகவும் மாணவனாகவும் துடிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒருவர். அவரது உடலுக்குத் தான் வயது அறுபது. ஆனால் அவர் மனது இன்றும் இருபது. துடிப்பு மிக்க அவரது ஆற்றலும் அர்ப்பணிப்பும், ஓய்வு காலத்திலும் மகிழ்ச்சியோடு இருக்கும் வல்லமையை அவருக்குக் கொடுக்கும் என்று நம்புகிறேன். அவரது ஓய்வு காலம் ஒளிமயமானதாகவும், அவர் நீண்ட ஆயுளோடும், ஆரோக்கியத்தோடும் வாழ எல்லாம் வல்ல அம்பிகையின் நல்லாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா,**
துணைவேந்தர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.



## மணிவிழாத் தலைவரின் உள்ளத்திலிருந்து...

நேர்மையும், அன்பும், கருணையும், இனிமையும், நிறைந்த சரா. புவனேஸ்வரன் அவர்கள் அறுபதாவது அகவையினைப் பூர்த்தி செய்வதும் அவர்தம் மணிவிழாக் குறித்து மலர் பிரசுரமாவதும் மட்டில்லா மகிழ்ச்சியைத் தருகின்றது. எந்தக் காரியங்களை கையிலெடுத்தாலும் சிறப்பாகவும், திறமையுடனும் ஒழுங்குற நிறைவேற்றுகின்ற தனக்குவமையில்லாத "சரா" அவர்களின் மணிவிழாச் சபையின் தலைவராக விளங்குவதையிட்டு பேருவகையடைகின்றேன். இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள சம்பூர்க் கிராமத்தில் சீரும், சிறப்புடனும் வாழ்ந்த சரவணமுத்து அவர்களின் புதல்வராக உதித்து வடக்குக்கு ஒளிபாய்ச்சும் புவனேஸ்வரன் அவர்கள் உடற்கல்வி ஆசிரியராக நியமனம் பெற்று நெற்றி வியர்வை நிலத்திற்சேர வருந்தி உழைத்து விரிவுரையாளராகி எந்த விடயங்களையும் தனித்து நின்று சாதிக்கும் நெஞ்சுரம் பெற்றவராக திகழ்ந்தார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராக தசாப்தம் கடந்து தன் பதவிக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்த இவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை மற்றும் பாடசாலை நிகழ்வுகள் பலவற்றிலும், இவரது நுணுக்கமான செயலொழுக்கத்தையும் கண்ணியத்தையும் அருகிருந்து பார்த்துப் பெருமையடைந்திருக்கின்றேன். ஆசிரியராக, விரிவுரையாளராக, சமூக சேவையாளராக, கலைஞராக, அறிவிப்பாளராக, என்னினிய நண்பராக விளங்கி மணிவிழாக் காணுகின்ற புலமையாளரான சரா அவர்கள் நூற்றாண்டு விழாக் கண்டு தொடர்ந்தும் நற்பணிகள் ஆற்றவும் நீண்ட ஆரோக்கியத்துடன் வாழவும் எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தனைப் பிரார்த்தித்து என்னினிய வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

**லயன் Dr. வை. தியாகராஜா**
தலைவர், சரா மணிவிழாச்சபை.



## யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் கௌரவ பொது செயலாளர் உயர்திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். முன்னாள் சம்பூர் கிராமசபை தலைவர் உயர்திரு சரவணமுத்து இரத்தினம் தம்பதிகளின் புத்திரன் திருவாளர் புவனேஸ்வரன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை திருகோணமலை சம்பூர் மகாவித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டவர். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் யாழ். பல்கலைக்கழகத்திலும் பயின்று யா/அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலையில் ஆசிரிய பணியை ஆரம்பித்தவர். தொழிற்சங்க பணியின் அதீத ஈடுபாட்டால் இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்தின் நிதிச் செயலாளராகவும், கௌரவ பொதுச் செயலாளராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. "வெற்றித்தேர்வு" வெளி யீட்டின் பிரதம ஆசிரியராகவும் சமூக சேவையில் ஈடுபாடு கொண்டவராகவும் அறியப்படுகிறார். திருவாளர் சரா. புவனேஸ்வரன் அவர்களின் சமூக சேவையினை ஆவணப்படுத்தும் நோக்கோடு சரா மணிவிழா சபையினர் மணிவிழா மலரினை வெளியீடு செய்வது பாராட்டுதல்களுக்குரியது.

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

என்னும் வள்ளுவனின் வாக்குக்கமைய தாம் இன்புறுவதற்கு காரணமான கல்வியால் உலகும் இன்புறுவதைக் கண்டு கற்றறிந்த அறிஞர் மென்மேலும் அக் கல்வியை விரும்புதல் போல் இவரது பணி மென்மேலும் சிறக்க இறைவனை வேண்டி மலரும் சிறப்பு மலர் சிறப்புடன் வெளிவர என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**அ. சிவபாலசுந்தரன்**
மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.



## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக கடமையாற்றி 01.06.2023 முதல் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களின் சேவையினைப் பாராட்டி வெளியிடப்படவுள்ள மணிவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 01.06.1963 இல் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தின் சம்பூரிலே பிறந்து தனது ஆரம்ப இடைநிலைக் கல்விகளினை தி/சம்பூர் மகா வித்தியாலயத்திலே சிறப்புறக் கற்றுத் தேர்ந்திருந்தார். உடற்கல்வித் துறையில் பட்டப்படிப்பினை மேற்கொண்டு பட்டம் பெற்றிருந்தார். தான் கற்ற கல்வியினை ஏனையவர்களும் பெற்றுக்கொள்ளும் பயனாக யா/அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலையில் தனது ஆசிரியர் கடமையினை பொறுப்பேற்று சிறப்பாக கடமையாற்றியிருந்தார். தொடர்ந்து யா/ நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் கடமையாற்றியதுடன் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற தேசிய பாடசாலைகளில் ஒன்றான யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் தனது பணிகளினை சிறப்பாக ஆற்றியிருந்தார் ஆசிரியர் பணியுடன் நின்றுவிடாது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை போன்றவற்றில் விரிவுரையாளராக கடமையாற்றியிருந்தார். 2011 முதல் ஓய்வு பெறும் வரை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். சங்க செயற்பாடுகளில் முன்னின்று உழைத்து ஆசிரியர்களின் நலனோம்பு விடயங்களில் அக்கறை கொண்டு திறம்பட செயற்பட்டிருந்தார். ஆசிரியர் பணியுடன் மட்டுமன்றி நூல் ஆசிரியர், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர் போன்ற பல்துறைகளிலும் தனது திறமைகளை வெளிக்கொணர்ந்து பலரும் அறியச் செய்துள்ளார். இவரது அளப்பரிய சேவையினை பாராட்டுவதுடன், தனது ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திப்பதுடன் விழாவினை ஒழுங்கமைப்பு செய்யும் விழா குழுவினர் மற்றும் மலர் வெளியீட்டு பணியினை ஆற்றும் குழுவினர் அனைவரையும் பாராட்டுவதுடன் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற மனதார வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ. உமா மகேஸ்வரன்**
செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம்.

சரா மணிவிழாச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காளி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு,**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## வீடு வாடகைக்கு

**Jaffna Hindu College** இற்கு
மிக அருகாமையில் 3 அறை
Attached Bathroom உடன்
கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
**வாடகை - 35000/=**
**Advance - 300,000/=**
**077 499 5655**

## மணமகள் தேவை

1984, அவிட்டம், 7 இல் செவ்வாய் (V),
உத்தியோகம், 1985, உத்தரம்,
7 இல் செவ்வாய் (V) உத்தியோகம்.
**077 964 9245** (24715) AH-1

## பணியாளர் தேவை

உடுவில் பகுதியிலுள்ள
கடையொன்றுக்கு தையல்
தெரிந்த பெண் பிள்ளைகள்
தேவை.
**075 236 4322, 077 366 9529**
CS/50835)AH-1

## மணமகள் தேவை

1988, இந்து, அஷ்வினி, Engineer
காரைநகர், மணமகன் பதிவு இல. 9099,
தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம்
மட்டுமே. www.EQMarriage
Service.com. அழையுங்கள்
076 664 9401. Ensured Quality
Lanka Pvt Ltd.,Colombo 04
CS/24953)AH-1

சிவமயம்
பிள்ளையார் துணை



# புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை
# திருவருள்மிகு சித்திவிநாயகர் தேவஸ்தானம்
## ஏகாதச தின (பதினொரு திருநாள்)
# வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2023

**ஐங்கரன் மெய்யடியார்களே!**

மங்கலகரமான சோபகிருது 23.06.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி பதினொரு தினங்கள் நடைபெற்று தொடர்ந்து பூங்காவனம், வைரவர் பொங்கலுடன் பூர்த்தியாக உள்ளது.

| 23.06.2023 வெள்ளி முற்பகல் 10.00 மணி | 02.07.2023 ஞாயிறு முற்பகல் 10.00 மணி | 03.07.2023 திங்கள் முற்பகல் 11.00 மணி |
|---|---|---|
| கொடியேற்றம் | தேர்த்திருவிழா | தீர்த்த உற்சவம் |

சிவஸ்ரீ.தியாக கெங்காதரக்குருக்கள்
சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் ஆகியோரின் ஆசிகளுடன்

மஹோற்சவ குரு
கிரியா கலாப மணி சிவஸ்ரீ சிதம்பர கிருஷ்ணசாமிக்குருக்கள்

ஐங்கரன் அடியவர்கள் ஊர் மக்கள் அவ்வமயம் ஆயாக்கடவை ஐங்கரனை வழிபட்டு திருவருள் பெற்று மங்கலகரமாக மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீராகுக.

*"மண்ணுக தில்லை, வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகல".*

**077 671 4191, 021 224 5051**
**ஆயாக்கடவை ஸ்ரீ சித்தி விநாயகர்**
**தேவஸ்தானம், புன்னாலைக்கட்டுவன்.**

சுபம்
**ஊர் மக்களும்,**
**மஹோற்சவ உபயகாரரும்**

**பா. சுந்தரராஜசர்மா**
**ஆதீன கர்த்தா**
**ஆயாக்கடவை ஆதீனம்,**
**புன்னாலைக்கட்டுவன்.**




**BMS** | Global Study Center
*make learning happen*

***Reaching your global future***

# BMS Global Education Expo'23

Study in UK, Canada Australia, New Zealand

## 24/25 June 2023 @ Colombo

- Right university & the course
- Post - study future opportunities
- Immigration & visa requirements
- Accompanying family members

M: 070 541 0272 E: globalstudies@bms.ac.lk

**BMS - CGS, No 3, Galle Road, Dehiwala**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22, விற்பனைக்கு, 22

யாழ். வைத்தியசாலை வீதியில் சந்தைக்கு முன்பாக 25 அடி அகலமும், 200 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும், யாழ். விக்ரோறியா வீதியில் 5 பரப்புக் காணியும், 12 பரப்புக் காணியும், யாழ். K.K.S.வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் 3 1/2 பரப்பு வீடும், காணியும், யாழ். பலாலி வீதியில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் 5 பரப்பில் அமைந்த மாடி வீடும், யாழ். கீரிமலை நகுலேஸ்வரன் கோயிலுக்கு அண்மையில் 160 பரப்புக் காணியும், யாழ். காரைநகர் மேற்கு வீதியில் 30 பரப்புக் காணியும், யாழ். கசூரினா பீச் அண்மையில் 260 பரப்புக் காணியும், யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதி முகப்புடன் 25 பரப்புக் காணியும், யாழ். K.K.S. வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும், யாழ். K.K.S. வீதியில் மனோகரா தியேட்டருக்கு அண்மையில் 3 மாடிக் கடையும், யாழ். சிவப்பிரகாசம் வீதியில் 2 1/2 பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 723 2535**

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் (V), 1985, சுவாதி, கிரகபாவம் 24, அரச தொழில் புரியும் மணமகனுக்கு அரச தொழில் புரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 525 9567**

## POLAND - போலண்ட்

### STUDENT VISA

UK பல்கலைக் கழக சான்றிதழ் ஐரோப்பிய நாட்டில்
IELTS தேவை இல்லை ( Not Wanted )
SHOW MONEY தேவை இல்லை
3 வருடங்களில் போலண்ட் நாட்டில் UK சான்றிதழ் கிடைப்பதால் UK, ஐரோப்பா நாடுகளில் நீங்களாகவே தொழிலை தேடிக் கொள்ளலாம்

Call : 077 4920030, 0788 410 403

## வாத்தியங்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீணை, தம்புரா, ஹார்மோனியம், சுருதிப்பெட்டி விற்பனைக்குண்டு.
K.P. பாலகிருஷ்ணன்
K.K.S. வீதி, பூநாறிமரத்தடி, கொக்குவில்.

**075 043 0845**

## ஆசிரியர் தேவை

உடுவில் பகுதியில் தரம் 3 இல் கல்வி கற்கும் மாணவிக்கு Personal Class எடுப்பதற்கு ஆசிரியர் தேவை.

**075 236 4322, 077 366 9529**

## வேலை வாய்ப்பு

**Sales Rep** மற்றும் **Field Executive** தேவை. அனுபவமுள்ள / அனுபவமற்ற அனைவரும் விண்ணப்பிக்கலாம். மாத வருமானம் **75000இற்கு மேல்.** (சுயவிபரத்தை Whatsapp மூலம் அனுப்பவும்.)

**077 473 7737**

## வீடு விற்பனைக்கு

உசன், மிருசுவிலில் அமைந்துள்ள 5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. மிருசுவில் புகையிரத நிலையத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் உள்ளது.

**077 599 0368**
**077 875 9847**

## வீடு வாடகைக்குத் தேவை

3 பேர் கொண்ட குடும்பத்துக்கு யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் திருநெல்வேலி, பிறவுண் வீதி, கொக்குவில், கல்வியங்காடு சுற்றாடலில் வீடு வாடகைக்குத் தேவை.

**076 999 2085**

## வேலையாள் தேவை

யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதி ஒன்றில் உள்ள உணவகம் ஒன்றுக்கு உணவு பரிமாறுபவர் (வெயிட்டர்) ஒருவர் தேவை. உணவு மற்றும் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தேவைப்படின் தங்குமிடமும் வழங்கப்படும்.

**076 722 7047**

## Meeter Taxi சேவை

உங்கள் வாடகைக்கு விடப்படும் வாகனங்களை Pick Me மீற்றர் Taxi சேவையில் இலவசமாக இணைக்க விரும்புபவர்கள் அழைக்கவும்.
(Three weeler, Van, Car, Bike, Truck)

துரித இலக்கம்:- **077 473 7737**

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் Chappel வீதியில் 7 அறைகள், 3 வரவேற்பு அறைகள், 3 குளியலறைகள், சமையலறை மற்றும் கராச்சுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**077 700 5644**

## கனடா Student விசா

**கனடாவிற்கு குடும்பத்துடன் செல்லலாம்**

**IELTS தேவை**

Student விசாவினை பெற்றுக்கொள்ள நாட வேண்டிய நம்பகரமான ஒரே இடம்

**EUROPE LINK**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

0742 555 319 | 0117 005 877
0763 915 660
info@europelinkedu.com
www.europelinkedu.com

## தற்காலத்தில் வாகனமொன்று பாதையில் பிரயாணிப்பதென்றால்

## இதோ அருமையான பாதை




- இரு பிணைதாரர்களுக்கு பதிலாக ஒரு பிணைதாரர் போதுமானது
- இரு தரப்பும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டவுடன் உடனடியாக முதற்கட்ட கொடுப்பனவு
- உரிய ஆவணங்கள் பூர்த்தி எனில் 48 மணி நேரத்தினுள் குத்தகை அனுமதி

QUICK DRAFT

எமது QUICK DRAFT சேவையின் மூலமாக எந்தவொரு வாகனத்தினதும் பதிவுப் புத்தகத்தை பிணையாக வைத்து, பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதி மற்றும் மாறுபடும் வட்டியுடன் தவணைக் கட்டுப்பணத்தை செலுத்தும் வாய்ப்பு

011 2 400 400    077 7 725 000

The World Of Hayleys

**SINGER FINANCE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 13.11.1943 — மறைவு 19.05.2023

கடந்த 19.05.2023 சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## திருமதி மங்கையற்கரசி கதிர்காமசேகரம்

(Ret. Nursing Officer, Government Teaching Hospital)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.06.2023 அன்று வெள்ளிக்கிழமை நடைபெற்று, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இன்று முற்பகல் 11.30 மணி தொடக்கம் பம்பலப்பிட்டி தொடர்மாடியில் அமைந்துள்ள சனசமூக மண்டபத்தில் (Community Hall) இல் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவியின் மறைவுச்செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் தமது அனுதாபங்களைச் செலுத்தி மற்றும் இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

XB/8/1/3, அரச தொடர்மாடி,
எட்மன்டன் வீதி, கிருலப்பனை, கொழும்பு - 06
077 770 6263, 077 226 0404

குடும்பத்தினர்

(cr.38118)(2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 02 . 1949 — இறப்பு 16 . 06 . 2023



## இராசையா இராசலிங்கம்

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர், மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்னாள் செயலாளர், தற்போதைய உப தலைவர், நல்லூர் பிரதேசசபை தமிழரசுக் கட்சி முன்னாள் உறுப்பினர், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, ஞானபண்டித வித்தியாசாலை பழைய மாணவ சங்கங்களின் முன்னாள் நிர்வாக உறுப்பினர், கோம்பயன்மணல் இந்து மயான நிர்வாக உப தலைவர்)

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், பத்தானை வீதி, தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராசலிங்கம் நேற்று முன்தினம் (16.06.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - இராசமணி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற இராசையா - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராதேவி யின் அன்புக் கணவரும், இராஜகலா (கனடா), ராஜீவா ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோகரன் (கனடா), கிருபாகரன் (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மிருசன், மிசானி, கருணேஸ், சஸ்மிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், இராசநாயகம், இராஜேஸ்வரன், இரத்தினேஸ்வரன், இரத்தினகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரபாலனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/25265)AH-1

தகவல்: குடும்பத்தினர்.

குடும்பத்தினர்: Mobile: +9477 8133010
கிருபாகரன் - மருமகன் : Mobile: +947 7753 1422
மனோகரன் - மருமகன்: Mobile : +164 7283 6291

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 . 05 . 1938 — உதிர்வு 30 . 06 . 2022

## உயர்திரு. விஸ்வலிங்கம் செல்வநாயகம்

(ஓய்வு நிலை பிரதம லிகிதர் - யாழ். மாநகரசபை)

*திதி: பிரதமை (19.06.2023)*

**அப்பா .....**

அன்பு கலந்த கண்டிப்புடன் எமை ஆளாக்கினீர்கள்
நாலு பேருக்கு மத்தியில் தலை நிமிர செய்தீர்கள்
வாழுலகின் உண்மைகளை அழகுறவே சொன்னீர்கள்
யாருக்கும் பாரமில்லா மிடுக்குடனே வாழ்ந்தீர்கள்
வையத்தில் எமக்கெல்லாம் ஒரே தலைவன் ஆனீர்கள்
விண்ணுலக ஏகத்திலும் சிறப்புடனே சென்றீர்கள்
எப்போதும் எம் நினைவில் நீங்காதே வாழ்வீர்கள்

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!*

[illegible]கோவில் வீதி,
புத்தூர்.

மனைவி, பிள்ளைகள்.

(cs.50878) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களமக்களின்...

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்யவேண்டும் என்று சரத் வீரசேகர தெரிவித்த கருத்துக்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முடிந்தால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்து பாருங்கள் என்று சவால் விடுத்திருந்தார். இது தொடர்பில் சரத் வீரசேகரவிடம் கேட்டபோது,

நாட்டின் அரசமைப்பை - சட்டங்களை - நாடாளுமன்ற விதிமுறைகளை மீறி சண்டித்தனம் காட்டுவோர் கைது செய்யப்பட்டே தீருவார்கள். எம்மைக் கைது செய்யுங்கள் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சவால்விடுவது பைத்தியக்காரத்தனம். அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒன்றையும், ஊடகங்களுக்கு முன்னிலையில் ஒன்றையும், மக்கள் முன்னிலையில் ஒன்றையும் பேசுகின்றார்கள். தமிழ் மக்களின் வாக்குகளால் பிரதிநிதிகளாகத் தெரிவான அவர்கள் மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யாது தங்கள் அரசியல் இருப்பைத் தக்கவைக்க இனவாதத்தையும் - மதவாதத்தையும் கையில் எடுக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கும் அவர்களின் பிரதிநிகளும் நாடு முழுவதும் 24 மணி நேரமும் சுதந்திரமாக நடமாடுவதற்கு முழு உரித்துண்டு. அதை அவர்கள் செய்து வருகின்றார்கள். ஆனால், வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்று தமிழர்கள் தம்பட்டம் அடிப்பது அவர்களுக்குத்தான் பேராபத்தாக போய்ச்சேரும். இது ஒற்றையாட்சி நாடு. எனவே இதை உணர்ந்து தமிழ் மக்களும், பிரதிநிதிகளும் செயற்படவேண்டும். கருத்துச் சுதந்திரம் அனைவருக்கும் உண்டு. ஆனால் அதியயர் சபைக்கும் பௌத்த - சிங்கள மக்களுக்கும் சவால்விடுக்கும் வகையிலும் அவர்களை கொதிப்படையச் செய்யும் கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்கவேண்டும் - என்றார்.

(அ-ஒ.5,22)

## போதைவிற்ற...

மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செயலமர்வொன்றில் பங்கேற்று கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் போதைப்பொருள் வியாபாரம் செய்யவில்லை. வேறு இயக்கங்கள் போதைப்பொருள் வியாபாரத்தை மேற்கொண்டன. போதைப்பொருள் வியாபாரிகளிடம் இருந்து நான் பணத்தைப் பெற்று இயக்கத்தை நடத்தினேன். இப்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட்டம் ஒன்றில் தெரிவித்ததாக பத்திரிகையில் படித்தேன்.

போதைப்பொருளை விற்கவில்லை. ஆனால், போதைப்பொருள் விற்ற பணத்தைப் பெற்றேன். இந்த இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?என்று அவர் கேள்வி எழுப்பினார். (அ-ஒ.125)

## மீனவர்களை...

விடுவதற்காகவா அதிகாரிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருக்கின்றனர்? என்று வடக்கு மாகாண மீனவர் அமைப்பின் பிரதிநிதியும், யாழ். மாவட்ட முன்னாள் சம்மேளனத் தலைவருமான அ.அன்னராசா கேள்வி எழுப்பினார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமராட்சி கிழக்கு மீனவர்கள் அண்மைக்காலமாக சூடைத் தொழிலில் ஈடுபட்டனர். இதன் மூலம் அவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்தினர். தற்போது அவர்கள் சுருக்குவலைத் தொழிலை கடந்த செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் ஆரம்பித்துள்ளனர். அவர்கள் சட்டவிரோதமாக சுருக்குவலைத் தொழிலை முன்னெடுப்பதால் அந்தப் பகுதியிலிருந்து வடமராட்சி தொடக்கம் காங்கேசன்துறை வரையில் மீன்களின் வரத்து குறைவடையும். இதனால் பல மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

எவ்வகையான மீன்கள் சுருக்கு வலையிலேயே பிடிக்கப்படவேண்டும், எந்த நேரம் பிடிக்கவேண்டும் என்பன உட்பட பலவிடயங்களை உள்ளடக்கி1987ஆம் ஆண்டே சட்டம் தயாரிக்கப்பட்டது.

ஏன் இந்தச் சட்டத்தை துறை சார்ந்த அதிகாரிகள் நடைமுறைப்படுத்தவில்லை. இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் மீனவர்களுக்கிடையிலே பிரிவினையையோ அல்லது மோதலையோ உருவாக்குகின்ற செயற்பாட்டை நிறுத்தவேண்டும். கடந்த காலங்களிலும் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக பல தடவைகள் அதிகாரிகள் வாக்குறுதியளித்தும் அவை நிறைவேற்றப்படவில்லை - என்றார்.

(அ-ஒ.26,27)

## குடும்பத்தலைவர்...

துஷ்யந்தன் விஜய் (வயது - 25) என்ற இளம் குடும்பத் தலைவரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் மூவர் தலைமறைவாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:-

உயிரிழந்த விஜயின் தம்பி அச்சங்குளத்தில் பெண் ஒருவரைக் காதலித்துள்ளார். பெண் வீட்டார் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். நேற்றுக்காலை விஜயின் மகனை தலைமுடி வெட்டுவதற்காக, விஜயின் தம்பி நானாட்டானுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அவர் காதலிக்கும் பெண்ணின் வீடு உள்ள பிரதான வீதி ஊடாகவே சென்றுள்ளார். அப்போது அந்தப் பெண்ணின் வீட்டிலிருந்து அவர் மீது கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நானாட்டான் சென்ற பின்னர் அண்ணனான விஜய்க்கு அவரது தம்பி நடந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். இதன் பின்னர் இருவரும் அந்தப் பெண் வீட்டுக்குச் சென்றுள்ளனர். அங்கு வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன் பின்னர் அங்கிருந்தவர்களால் விஜய் மற்றும் அவரது தம்பி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தம்பி தப்பிச் சென்ற நிலையில் கீழே விழுந்த விஜய் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது. அதில் அவர் உயிரிழந்துள்ளார் என்று குறிப்பிட்டனர். (அ-ஒ.213)

## வடக்கு...

சில வருடங்களின் முன்னர் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையின் கட்டடத்தை அண்மையில் சொகுசு பேருந்து ஒன்று மோதியதில், 7 இலட்சம் ரூபாவுக்கு சேதம் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டிருந்தது. இதற்கான இழப்பீட்டை பேருந்தின் காப்புறுதி நிறுவனம் ஊடாக பெற்று வழங்கியிருக்கவேண்டும். சொகுசுப் பேருந்து உரிமையாளர் சேதத்துக்கான பெறுமதியை வழங்கியிருக்கவில்லை. அரச நிதியில் அது திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

விபத்து நடந்தபோது, கிளிநொச்சி தெற்கு கல்வி வலயப் பணிப்பாளராகச் செயற்பட்டவர், திருஞானம் ஜோன் குயின்ரஸ். அவர் இப்போது வட மாகாண பதில் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார்.

விபத்து தொடர்பான வழக்கு கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, தற்போதைய வலயக்கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன் முன்னிலையாகியிருந்தார். காப்புறுதி நிறுவனப் பணம் கிடைக்கவில்லையென மன்றில் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கில் முன்னிலையாகிய பின்னர், வடமாகாணப் பதில் கல்விப்பணிப்பாளர் திருஞானம் ஜோன் குயின்ரஸ் தன்னை அச்சுறுத்துவதாகவும், அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதமாக செயற்படுவதாகவும், சுயவிவரக் கோவையில் ஆவணங்களைச் சேதம் செய்தல், பதவி உயர்வுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் முறையிட்டுள்ளார்.

அத்துடன், விபத்தை ஏற்படுத்திய வாகனச் சாரதி, வலயக்கல்விப் பணிமனைக்கு வந்து, வாகன உரிமையாளர் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து ஒரு கோடி ரூபா பெற்றதாகவும், 'உண்மையில் உங்களுக்கு விபத்து நட்டஈடு கிடைக்கவில்லையா?' என வினவியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

'நீர் ஏன் நீதிமன்றம் சென்றீர்?', 'உம்மை யார் நீதிமன்றம் போகச் சொன்னது?' என பதில்மாகாண கல்விப்பணிப்பாளர் கேள்வியெழுப்பியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறைப்பாடு கிடைத்ததை உறுதிப்படுத்திய கல்வி அமைச்சின் செயலர் உமாமகேஸ்வரன், பதில் கல்விப் பணிப்பாளரிடம் விளக்கம் கோரியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதில் கல்விப் பணிப்பாளர் குயின்ரஸின் கருத்தை அறிவதற்கான பல தடவைகள் அவரது அலைபேசிக்கு அழைப்பு எடுத்தபோதும் அவர் பதிலளிக்கவில்லை. (அ-ஒ.125)

DHL துரித பொதிகள் சேவை
▲ சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள் அனுப்பிட முடியும்.
▲ மருந்து பொருட்கள், பழ வகைகள், எண்ணெய் வகைகள் மற்றும் இதர பொருட்கள் எம் ஊடாக அனுப்பிட முடியும்.
▲ 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. வீதி,
(முட்டாஸ் கடைச் சந்தி), யாழ்ப்பாணம். T.P: 0777 55 45 28

வீட்டு வேலைக்கு ஆட்கள் தேவை
யாழ் - தீவகத்தில் வீட்டிலேயே தங்கியிருந்து வேலை பார்க்க 35 வயதுக்கு மேற்பட்ட ஆண் / தம்பதிகள் உடனடியாகத் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு: 076 226 2258
(Cs 50866) (W-1)

பணிப்பெண் தேவை
யாழ். நகரில் வீடொன்றில் வீட்டுப்பணி புரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
077 0250 339

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 04 . 1949



இறப்பு 16 . 06 . 2023

### திரு.நடராசா வாமசிவன்

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடராசா வாமசிவன் 16.06.2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நடராசா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவகுரு தம்பதியரின் அன்பு மருமகனும், மாலதியின் (மாலா), பாசமிகு கணவரும், தக்ஷாயினி, விஷ்ணுவர்த்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், துவாரகன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டீபாஞ்சலி, கிஷோபன், தவிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், கமலநாயகி, வாமதேவன், வாமபாகன், தேவநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், துரைசிங்கம், காலஞ்சென்ற மாலினி, மற்றும் உமாபதி, பாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (19.06.2023) திங்கட்கிழமை காலை 8.00மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இல.66/1, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 285 8734
077 267 4802

(Cs 50876) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுவாச்...

கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ.ஜெயசிங்க தலைமையில் முல்லைத்தீவில் நடைபெற்ற நிகழ்வில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாகக் காணப்படும் கறுவா தெற்கில் சில இடங்களில் செய்கை பண்ணப்பட்டு வந்தாலும் வடக்கில் கறுவா செய்கைக்கான நில அமைப்பும் மற்றும் கால நிலை அமைப்பும் காணப்படுவதாகவும் வடபகுதி மக்களுக்கு இதனை அறிமுகம் செய்துள்ள அதேவேளை இது ஒரு சிறந்த வாய்ப்பு என்பதால், இந்தச் சந்தர்ப்பத்தை மக்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஓ.19)


### வீடு வாடகைக்குத் தேவை
நான்குபேர் கொண்ட குடும்பத்துக்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
076 660 6970

### ENGLISH CLASSES
SPOKEN ENGLISH WITH GRAMMAR
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள்
தொழில்புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு
K.Ganesh B.A 077 766 8725

### மணமகள் தேவை
1981 ஆம் ஆண்டு பிறந்த, லண்டனில் வசிக்கும் (PR) லண்டனில் படித்த மணமகனுக்கு ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்த பெண்ணைத் தேடுகின்றோம்.
077 668 3717

### பெண் வேலையாள்கள் தேவை
Fresh யூஸ் கடை ஒன்றுக்கும், பக்கிக் வேலை செய்வதற்கும் இரு பெண் வேலையாள்கள் தேவை. (வயது 30 - 55)
சாவகச்சேரி - 077 558 9955

### காணிகள் விற்பனைக்கு
யாழ். நகரை அண்டிய அரியாலைப் பகுதியில் வீடுகள் அமைப்பதற்கான காணிகள் மற்றும் தென்னங் காணிகள் உடனடி விற்பனைக்குண்டு.
070 402 4234

### காணி விற்பனைக்கு
சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(CS24384)(J-1) 070 701 3060

### விற்பனைக்கு
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் (மொத்தமாக) மற்றும் கடைக்குரிய றாக்கைகள் என்பன விற்பனைக்கு உண்டு.
077 673 8033, 075941 3565

### வேலையாள் தேவை
மருதனார் மடத்தில் இயங்கி வரும் கடை ஒன்றுக்கு பெண் வேலையாள் தேவை.
076 287 8157

### வீடு விற்பனைக்கு
கொக்குவில் கிழக்கு, கருவப்புலம் வீதியில் சிறந்த சுற்றுப்புற சூழலில் ஒரு பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 074 090 1496
077 469 2981

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், K.K.S. இல் தல் செவன, துறைமுகம் என்பவற்றுக்கு 1km தூரத்தில் 8 பரப்புக் காணியும், K.K.S. - பருத்தித்துறை காரப்பட் வீதியில் இருந்து 3 ஆவது காணி 12 பரப்பும் (மயிலிட்டி எல்லையில்) விற்பனைக்குண்டு.
075 521 3533

### விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி
A/L 2025
ஆரம்பம் : 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை : 9.30 Am
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 288 7774

### தமிழ்ப்பாட வகுப்புகள்
யாழ் நகரில் அனுபவம் வாய்ந்த பெண் ஆசிரியரால் க.பொ.த.உயர்தரம், சாதாரண தரம் மற்றும் இடைநிலை வகுப்புகளில் (6,7,8,9,10) கற்போருக்கு தனியாகவும், குழுவாகவும் தமிழ்ப்பாடம் (அடிப்படை இலக்கணம் உட்பட) கற்பிக்கப்படுகின்றது.
- விருப்பத் தெரிவு - இலக்கியநயம் (Tamil Literature)
- ஆங்கில மொழி மூலம் கற்போர்
- குறைந்த மதிப்பெண்கள் பெறுவோர் விடயங்களில் பிரத்தியேக கவனம் செலுத்தப்படும்.

2025 - உயர்தர மாணவர்களுக்கு அவரவர் விரும்பும் அலகுகளுக்கு (தேர்ச்சி, தேர்ச்சி மட்டம்) அமைவாக கற்பித்தல் அமையும்.
077 532 7636

### வீடு வாடகைக்கு
கந்தர்மடம், அம்மன் வீதியில் நான்கு அறைகள், வரவேற்பறை, சாப்பாட்டறை, குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. மருத்துவர், பொறியியலாளர், விரிவுரையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
076 802 7141 (காலை 10 - இரவு 9 மணிவரை தொடர்பு கொள்ளவும்.)

### வேலை வாய்ப்பு
Petform (Pvt) Ltd யாழ்ப்பாண கிளைக்கு Sales Assistant பதவிக்கு ஆள் தேவை.
* வயதெல்லை - 20 - 30 வருடங்கள் (ஆண்கள்)
* இரண்டு வருட முன் அனுபவம்
* வாகன அனுமதிப்பத்திரம் உடையவராய் இருத்தல்
* உயர்தரத்தில் வணிகத்துறை படித்திருத்தல்.
* அடிப்படை சம்பளத்துடன் கொமிசன் வழங்கப்படும்.

தொடர்பு: 076 072 1245, 021 223 2721

### கடை வாடகைக்கு
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்கு உண்டு.
075 803 9586

தரமான பொருட்களை நியாயமான விலைகளில் உங்களுக்குத்தருவதில் என்றும் முன்னணியில் திகழ்வது....
உழவர் அரிசிக்கடை
மலிவு விற்பனை
உழவர் - ஆட்டக்காரி
அரிசி 10 கிலோ வாங்குவோர்க்கு 1 கிலோ அரிசி இலவசம்
உழவர் அரிசிக்கடை மருதனார்மடம் (சந்தை உட்பக்கத்தில்)
Open Daily: 06.00 - 15:00

### தனியார் வகுப்புகள்
பொறியியலாளரினால் (BSc.Eng)
A/L பௌதிகவியல்.
தரம் : 9 - 11 கணிதம், Auto CAD வகுப்புகள் தனியாகவோ/ குழுவாகவோ/ வீட்டிலோ/ வீடு வந்தோ குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படுகின்றது.
075 232 5325

### சமையலாளர் தேவை
யாழ். நகரில் இயங்கும் Fast Food Resturant ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த
- சமையலாளர்
- PIZZA தயாரிப்பாளர்

உடனடியாகத் தேவை.
077 642 1065
076 330 4472

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு.
* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

தொடர்பு: 076 739 0413
076 436 5814

### காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் புத்தூரில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 300,000/= (மூன்று லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 7336 047, 076 7558 606


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 • 08 • 1944

உதிர்வு 21 • 06 • 2020



### அமரர் ருக்குமணி ஆனந்தவேல்
(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

திதி: பூர்வபக்க பிரதமை

எம் ஆருயிர் அன்னையே!
மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
அனுதினமும் நீங்கள் அருகில் இருப்பதை
- உணருகின்றோம்
உருவமாய் இல்லை என்றாலும்
தெய்வமாய் எங்களுடன் இருந்து
ஆசி புரியுங்கள்.

உங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி, நீர்வேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | ஆனி 03 | ஞாயிற்றுக்கிழமை (18.06.2023) | சிகரம் : 141

பகலில் எரியும்
மெழுகுவர்த்தியின் திரியிலிருந்து
சுருள் சுருளாய் விரிகிறது
இருள்
- பிரான்சிஸ் கிருபா

# பரீட்சை எழுதிய பிள்ளைகள் செய்த குழப்படி

○ நிலாந்தன்



அண்மையில் ஓ/எல் பரீட்சை எழுதிய மாணவர்கள் பரீட்சைகள் முடிந்த கடைசி நாளன்று வகுப்பறைகளிலும் வகுப்புக்கு வெளியேயும் அட்டகாசம் செய்ததாக சில ஒளிப்படங்கள் வெளியாகின. இந்த ஒளிப்படங்களை வைத்து மூன்று விதமான கருத்துகள் கூறப்பட்டன. முதலாவது, சில மாணவர்கள் செய்த குழப்படிகளுக்காக எல்லா மாணவர்களையும் குற்றங்கூறக்கூடாது என்று . இரண்டாவது, அந்த வயதுக்கு அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க விடுங்கள் என்பது. மூன்றாவது. ஆசிரியர்களின் கைகளில் இருந்து பிரம்பு பறிக்கப்பட்டதால் மாணவர்கள் தறிகெட்டுப் போய் விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு.

பரீட்சை முடிந்த கடைசிநாளைக் கொண்டாடுவது என்பது ஒரு பொதுவான மாணவ உளவியல். அதை எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்பதுதான் இங்கு பிரச்சினை. இதை இரண்டு விடயங்கள் தீர்மானிக்கின்றன. ஒன்று பரீட்சை எத்தகையது என்பது. அல்லது கல்விமுறை அல்லது கல்விச் சூழல் எத்தகையது என்பது. இரண்டாவது மாணவர்களுக்கு யார் முன்மாதிரிகள் என்பது. முதலாவதாக கல்விச் சூழல் பற்றிப் பார்க்கலாம். இலங்கைத் தீவு அதன் இலவசக் கல்வியைக் குறித்து பெருமைப்பட்டுக் கொண்டாலும், நடைமுறையில் போட்டிப் பரீட்சையானது தனியார் கல்வியை ஊக்குவிக்கிறது. அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி “எமது பிள்ளைகள் இலவசக் கல்வியை முழுமையாக அனுபவிக்கின்றனர் என்று அரசாங்கம் கூறினாலும் அது பெரும் பொய்" என்று கூறியிருக்கிறார் “நாட்டில் மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவது இலவசக் கல்வியினால் அல்ல, தனியார் பணத்தினால்”என்றும் அவர் கூறியுள்ளார்.

போட்டிப் பரீட்சையானது சிறுபிராயமிருந்தே பிள்ளைகளுக்கு இடையே போட்டி உணர்வை - பொறாமை உணர்வை - சுயநலத்தை வளர்க்கின்றது. இதன் விளைவாக இலவசக் கல்வியின் உன்னதங்கள் பிரகாசமிழந்து விட்டன ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எனப்படுவது பிள்ளைகளுக்கானது என்பதை விடவும் நடைமுறையில் பெற்றோருக்கு உரியதாகவே காணப்படுகின்றது. ஐந்தாம் ஆண்டு பிள்ளையைக் கசக்கிப் பிழியும் அந்தப் பரீட்சையை அகற்றுமாறு பெரும்பாலான கல்வி உளவியலாளர்களும் மருத்துவர்களும் எப்பொழுதோ சொல்லிவிட்டார்கள். ஆனால் நாடு இன்றுவரை அதைக் கைவிடத் தயாரில்லை. அதற்கு மாற்று ஏற்பாட்டைக் கண்டுபிடிக்கவும் தயாரில்லை.

ஐந்தாம் ஆண்டிலிருந்து பிள்ளையை கசக்கிப் பிழியத் தொடங்கும் ஒரு கல்வி முறையானது ஓ/எல் பரீட்சையின் போது பிள்ளைக்குச் சித்திரவதையாக மாறுகிறது. கல்வி சுமையாக, சித்திரவதையாக மாறும்பொழுது பரீட்சை ஒரு தத்தாக மாறுகின்றது. அந்தப் பரீட்சையை எழுதிக் கடந்த பிள்ளை அந்த மகிழ்ச்சியை கொண்டாடுந்தானே? ஆனால் அது எப்படிக் கொண்டாடுகிறது என்பதுதான் பிரச்சினை.

“நாடாளுமன்றத்தினுள் மிளகாய்த் தூள் வீசி சண்டையிடுகின்றனர், கதிரைகளை வீசி எறிந்து சண்டையிடுகின்றனர், இவற்றை முன்னுதாரணமாகக் கொண்டே மாணவர்களும் செயற்படுவதாக" இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதுதான் உண்மை. மாணவர்களுக்கு முன்மாதிரிகள் குறைந்துவிட்டன. போட்டிப் பரீட்சையானது பாடசாலையின் பெறுமதியைக் குறைத்துவிட்டது. ஆளுமையை உருவாக்கும் பள்ளிக்கூடம் தனியார் கல்வி நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் சந்தைப் பெறுமதியை இழந்துவிட்டது. அதே சமயம், தனியார் கல்வி நிறுவனங்கள் பிள்ளைகளைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் இயந்திரங்களாக அல்லது பந்தயத்துக்குக் குதிரைகளைத் தயார்ப்படுத்தும் பயிற்சி நிலையங்களாகவே காணப்படுகின்றன. பந்தயக் குதிரைக்கு அல்லது சவாரி மாட்டுக்கு எதைக் கொடுத்தாவது எதைச் செய்தாவது வேகமாக ஓடவைக்க வேண்டும் என்ற மனோநிலையோடு அணுகும் பயிற்சியாளராக ஆசிரியர்கள் மாறுகிறார்கள். ஓ/எல் பரீட்சை முடிந்தபின் அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடிய மாணவர்களைக் குறித்து விமர்சிக்கும் பலரும் அந்தப் பரீட்சை முடிந்த அடுத்தடுத்த நாளில் ஏ/எல். பாடங்களுக்கான தனியார் வகுப்புகள் தொடங்கியதைப்பற்றி விமர்சித்திருக்கிறார்களா? ஒரு பரீட்சை முடிந்த கையோடு அடுத்த கட்ட பாடங்களைத் தொடங்க வேண்டிய தேவை என்ன? யார் முந்தித் தொடங்குவது என்ற போட்டிதானே காரணம்? இந்தப் போட்டி காரணமாக பிள்ளை அதன் ஓய்வை இழக்கின்றது. நவீன கல்வியில் ஓய்வும் படிப்பின் ஒரு பகுதி. ஆனால் பரீட்சை முடிந்த கையோடு பிள்ளை அடுத்த பந்தயத்துக்கு தயாராகின்றது. இது பிள்ளையின் உளவியலை எப்படிப் பாதிக்கும் ? இந்த விடயத்தில் கல்முனைப் பிரதேசசபை ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டுக்குரிய ஏ/எல். பாடங்களை இம்மாதம் இறுதிவரை ஆரம்பிக்க வேண்டாம் என்று கல்முனை மாநகர சபை ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

அந்த முன்மாதிரியை ஏன் ஏனைய உள்ளூராட்சி சபைகளும் பின்பற்றக் கூடாது? அண்மையில் யாழ். மாவட்டச் செயலர் தனியார் கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தார். ஆனால் அதுகூட ஒன்பதாம் ஆண்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்குத்தான். அப்படியென்றால் 9 ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பந்தயக் குதிரைகளாக்கப்படுவது மறைமுகமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறதா? ஆம். அதைத் தடுக்க முடியாத ஒரு சமூகச் சூழலே காணப்படுகின்றது. ஏனென்றால் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற வேண்டும் என்ற வெறி பெற்றோருக்கும் அதிகம். இது சமூகத்தின் கல்வி பற்றிய கருதுகோள்களினால் தீர்மானிக்கப்படு கிறது. குறிப்பாக விஞ்ஞான, கணிதப் பிரிவுகளுக்குரிய பிள்ளைகளைப் பொறுத்தவரை வாழ்க்கையை வெறுத்துப் படிக்கவேண்டும் என்று பெற்றோரும் கருதுகிறார்கள். ஆசிரியர்களும் கருதுகிறார்கள். சிறந்த பெறுபேறுகளுக்காக எதையும் பலியிடலாம் என்ற மனோநிலை ஊக்குவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஏ/எல் பாடங்களைப் படிப்பிக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகுப்பறை வசதிகளைக் கொண்டிருக்கின்றனவா? சில தனியார் கல்வி நிறுவனங்கள் தங்களைக் கண்டிப்பானவைகளாகக் காட்டிக்கொள்ள ஒழுக்கத்திலும் பெண் பிள்ளைகளின் விடயத்திலும் கிட்டத்தட்ட தலிபான்களைப் போலவே நடந்து கொள்கின்றன. ஆனால் அங்கே நூற்றுக்கணக்கில் பிள்ளைகள் ஒன்றாக இருந்து படிப்பார்கள். அது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகுப்பறை ஒழுங்குகளுக்கு எதிரானது. ஒரு வகுப்பறையில் எத்தனை பேர் இருக்கலாம் என்று ஒரு அளவு உண்டு. ஆனால் பெரும்பாலான தனியார் கல்வி நிறுவனங்களில் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் ஒன்றாக இருந்து கல்வி கற்கின்றார்கள். ஒருவர் மற்றவரோடு முட்டியபடி இருக்க வேண்டும். முதுகைச் சாய்க்க முடியாது. புத்தகப் பையை வைக்க இடம் கிடையாது... போன்ற முறைப்பாடுகள் உண்டு.

சில தனியார் கல்வி ஆசிரியர்கள் பிள்ளைகளை நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு முன் பகிரங்கமாகத் தண்டிக்கிறார்கள். இது கல்வி உளவியலுக்கு முரணானது. பிள்ளையின் குறைந்த புள்ளிகளை சுட்டிக்காட்டி அவமதிப்பது. பிள்ளையை வகுப்பை விட்டுத் துரத்துவது. போன்ற பகிரங்கத் தண்டனை முறைகள் உண்டு. இவையனைத்தும் மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுகள். இதையே பாடசாலை செய்தால் அதற்கு நீதிமன்றம்வரை போகும் சமூகம், தனியார் கல்வி நிறுவனங்களில் நிகழும் இவ்வாறான பகிரங்கத் தண்டனைகளைக் குறித்து அலட்டிக்கொள்வதில்லை. ஏனென்றால் சிறந்த பெறுபேறுகளுக்காக மனிதஉரிமைகள் பலியிடப்படுவதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சமூகமாக நாம் எப்பொழுதோ மாறிவிட்டோம். அங்கிருந்தும் தொடங்குகின்றது வன்முறை.

சிறந்த பெறுபேறுகளுக்காக உயர்தரத்தில் ஒரு பாடத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களிடம் செல்லும் போக்கு அதிகரித்து வருகிறது. இதனால் பிள்ளைகள் சுயமாகக் கற்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. சுயகற்றலை ஊக்குவிக்காத கல்வி முறை பிள்ளைகளை எங்கே கொண்டு போய் விடும்? சமூகத்தை எங்கே கொண்டு போய் விடும் ?

கடந்த ஆண்டு ஓ/எல் பரீட்சை முடிவுகள் வெளிவந்த பொழுது பிள்ளைகள் அதிகம் சுயமாகக் கற்றிருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டப்பட்டது. பெருந்தொற்று நோய் காரணமாக பிள்ளைகள் வீடுகளில் முடங்க வேண்டி இருந்தபடியால் அவர்கள் சுயமாகக் கற்க வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அதே சமயம் மாணவர்கள் மத்தியில் ஒரு கூட்டுஅபிப்பிராயம் உண்டு. பாடசாலைக்குப் போகும் நேரத்தை குறைத்தால் வீட்டிலிருந்து அதிகமாகப் படிக்கலாம் என்பதே அது. அதாவது தனியார் கல்வி நிறுவனங்களுக்கு போகும் நேரத்தை குறைக்க அவர்கள் தயாரில்லை. மாறாக பள்ளிக்கூடத்துக்குப் போகும் நேரத்தைக் குறைத்தால் கூடுதலாகப் படிக்கலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

போட்டிப் பரீட்சையானது பாடசாலையின் சந்தைப் பெறுமதியைக் குறைத்து விட்டது. ஆசிரியர் மாணவ உறவின் மகிமையைக் குறைத்துவிட்டது. பிள்ளைகளைத் தறுக்கணிக்க வைக்கின்றது. பிள்ளைகளுக்கு இடையே போட்டி, பொறாமை போன்றவற்றை ஊக்குவிக்கின்றது. பொதுநலத்தை விடவும் சுயநலத்தை ஊக்குவிக்கிறது. அதன் விளைவாக யாருக்கும் பயப்படாத, யாரையும் மதிக்காத, எதையும் புனிதமாகக் கருதாத ஒரு போக்கு பிள்ளைகள் மத்தியில் வளர்ந்து வருகிறது.

எனவே மாணவர்கள் தறிகெட்டுப் போகின்றார்கள் என்று சொன்னால் அதற்கு அந்தச் சின்னப் பிள்ளைகள் மட்டும் பொறுப்பில்லை. முழுச்சமூகமும் பொறுப்பேற்க வேண்டும். முழுநாடும் பொறுப்பேற்க வேண்டும். முதலாவதாக கல்வி முறைமைதான் குற்றவாளி. அந்தக் கல்விமுறையின் கைதிகளாக அல்லது கருவிகளாகக் காணப்படும் ஆசிரியர்களும் பெற்றோரும் பெரிய புரட்சிகரமான மாற்றம் எதையும் செய்துவிட முடியாது. தன் சொந்தப் பிள்ளையின் விடயத்தில் வேண்டுமென்றால் பெற்றோர் 'ரிஸ்க்' எடுக்கலாம். ஒரு முறைமைக்கு எதிராக பிள்ளையைச் செதுக்குவதில் சவால்கள் உண்டு. ஆனால் அதைவிட வேறு வழியில்லை. ஏனென்றால் இந்தக் கேடு கெட்ட நாடு போட்டிக் கல்விமூலம் உருவாக்கிய படிப்பாளிகள் பலர் ஒரு பொருளாதார நெருக்கடியின் போது நாட்டை விட்டு எப்படித் தப்பிச் செல்வது என்றுதான் சிந்தித்தார்கள்.

ஏன் அதிகம் போவான்? பொருளாதார நெருக்கடியே ஒரு விதத்தில் நாட்டின் கல்விமுறையின் தோல்விதான். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ஒரு சிந்தனைக் குழாமை உருவாக்கியிருந்தார். 'வியத்மக' என்று அழைக்கப்பட்ட அந்தச்சிந்தனைக் குழாம் நாட்டின் பெரிய படிப்பாளிகளை வைத்து உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த அரசாங்கம்தான் முடிவில் மக்களால் துரத்தப்பட்டது. நாட்டை பெற்றோல் கியூவில் நிறுத்திய படிப்பாளிகள் செய்த குற்றத்தை விடப் பெரிய குற்றத்தையா அந்தப் பதினாறு வயதுப் பிள்ளைகள் செய்துவிட்டார்கள்? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதவி விலகலும் பௌத்த வியூகங்களும்

○ அ.நிக்ஸன்

**2009** க்குப் பின்னரான சூழலில் இலங்கைத் தீவு ஒற்றையாட்சி அரசு என்பதை மேலும் உறுதிப்படுத்தும் சிங்கள‌த் தலைவர்களின் அரசியல் வேலைத் திட்டங்கள் தற்போது. கட்சி ,அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் முழுமையடைந்து வருகின்றன.

அமெரிக்க, இந்திய மற்றும் சீன அரசுகள் தமக்கிடையே ஏட்டிக்குப்போட்டியான காரியங்களில் ஈடுபட்டாலும் இலங்கை ஒற்றையாட்சி என்பதை ஏற்றுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடந்த வருடப் பொருளாதார நெருக்கடியின்போதும் பகிரங்கமாகப் பெருமையோடு கூறியிருந்தார்.

2021 இல் கண்டியில் ஞானசார தேரர், 'இலங்கை பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம்' என்று பகிரங்கமாகப் பிரகடனம் செய்தபோது, மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மாத்திரமே அதனைக் கண்டித்திருந்தார். ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட எந்த ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஞானசாரதேரரின் அந்தக் கருத்தை அப்போது கண்டிக்கத் துணியவில்லை.

இந்த நிலையில் இலங்கைத் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் அனுர மனதுங்கவுடன் முல்லைத்தீவு தொல்பொருள் அகழ்வாராய்ச்சி தொடர்பாக ரணில் தர்க்கப்பட்டார் என்றும், அதனால் பணிப்பாளர் தனது பதவியில் இருந்து விலகினார் எனவும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புகழாரம் சூட்டுவதுதான் வேடிக்கை.

மஹிந்த ராஜபக்ச வடக்கு - கிழக்குத் தாயகப் பகுதிகளுக்குச் செல்லும்போதெல்லாம் இலங்கைத்தீவில் உள்ள எந்த ஒரு மாகாணமும் மாவட்டமும் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்ததாக இருக்கக்கூடாது என்று மார்தட்டியிருக்கிறார். அவ்வாறு கூறிய மஹிந்தவின் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியின் நூற்று இருபத்து எட்டு உறுப்பினர்களின் ஆதரவுடன்தான் ரணில் அரசாங்கத்தை அமைத்துள்ளார்.

இந்த நிலையில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பதவி விலகியதும் கண்டி மகாநாயக்கத் தேரர்களைச் சந்தித்த பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர்,' ரணிலுக்குப் பௌத்த சமயத் தொல்பொருள் பற்றிப் பேச அருகதையில்லை' என்று கூறியதுடன், 'வடக்கு-கிழக்கில் உள்ள பௌத்த தொல்பொருள் சின்னங்களைத் தமிழ்ப் பயங்கரவாதிகளிடம் ரணில் அடகுவைக்கப் போகிறார் 'என்றும் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியிருக்கிறார்.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் 1950 களில் 'கல் ஓயா' திட்டத்திலிருந்து 1970 களில் துரிதப்படுத்தப்பட்ட மகாவலித் திட்டம் வரையிலான நீர்ப்பாசனத் திட்டங்களுடன் ஆரம்பித்த சிங்களக் குடியேற்றம், தற்போது தொல்பொருள் அகழ்வாராய்ச்சி என்ற போர்வையில், பௌத்த மயமாக்கலுக்கான வேறுபட்ட பாதையை மிக நுட்பமாகக் கையாள ஆரம்பித்திருக்கிறது.

ஏறத்தாழ பலஸ்தீனத்தில், இஸ்ரேலிய அரசு ஆரம்பித்த யூதக் குடியேற்றங்களுக்கு ஒப்பானதாகச் சிங்களக் குடியேற்றங்கள் அரங்கேறுகின்றன.

அதுவும் 2009 மே மாதத்தின் பின்னரான குறிப்பாக நல்லாட்சி எனக் கூறப்பட்ட மைத்திரி ரணில் அரசாங்கம் 2015 இல் இருந்து சிங்களக் குடியேற்றங்கள் உள்ளிட்ட பௌத்த மயமாக்கலை தொல்பொருள் திணைக்களம், காணி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வனவளத் திணைக்களம் ஆகியவற்றின் மூலம் சட்ட ரீதியானதாக மாற்றியிருந்தது.

2015 இல் ரணில் பிரதமராக இருந்தபோது அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் பௌத்த தொல்லியல் ஆராய்ச்சியாளர்களுக்கு, வடக்கு- கிழக்கில் நடைபெறும் பௌத்த அகழ்வாராய்ச்சிகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டிருந்தன. சிங்கள நாளிதழ்கள் இந்தச் செய்திக்கு அன்று முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

இந்த நிலையில் கடந்த வாரம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்ற சந்திப்பில் பங்குபற்றிய தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருடன் ரணில் முரண்பட்டார் என்ற செய்தியும் அந்தச் செய்திக்குரிய மிகைப்படுத்தலும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைப் பெறும் நோக்கம் கொண்டது என்பது பட்டவர்த்தனமாகிறது.

விவிலிய மற்றும் யூதத் தொன்மங்களின் அடிப்படையிலான தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளின் மூலம், இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான மற்றும் சுதந்திரமான அரபு பலஸ்தீனம் சியோனிச ஆக்கிரமிப்பால் திட்டமிட்டுச் சிதைக்கப்பட்டதாகப் பேராசிரியர் அமீர் அலி சென்ற வெள்ளிக்கிழமை கொழும்பு ரெலிகிராப் (colombotelegraph) ஆங்கில செய்தித் தளத்தில் எழுதிய கட்டுரையில் விபரிக்கிறார்.

தமிழர் பிரதேசத்தில், பௌத்த ஆக்கிரமிப்புக்குரிய வழிமுறைகள் பற்றிக் கொழும்பில் உள்ள இஸ்ரேல் தூதரகம் இலங்கைக்கு வகுப்பெடுத்து வருகிறதா? எனவும் அந்தக் கட்டுரையில் பேராசிரியர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பலஸ்தீனிய நிலங்கள் சியோனிச இஸ்ரேலால் தொடர்ந்து விழுங்கப்பட்டு வருகின்றன. அதுவும் ரஷ்ய உக்ரைன் போர்ச் சூழலில் அமெரிக்கா போன்ற எந்த ஒரு மேற்கு நாடோ அல்லது ஐரோப்பிய நாடுகளோ இஸ்ரேல் அரசிடம் கண்டனங்கள் எதனையும் தெரிவிக்கவில்லை.

இதேபோன்ற ஒரு சூழல்தான் வடக்கு-கிழக்கிலும் சிங்கள - பௌத்த மயமாக்கலை அமெரிக்க இந்திய அரசுகள் கண்டிக்காமல்,இலங்கை கேட்கின்ற அனைத்துப் பொருளாதார உதவிகளையும் செய்கின்றன. குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் மீள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற வெறும் ஒற்றை வார்த்தையில் மாத்திரம் அழுத்தம் கொடுத்து விட்டு, நிதி உதவிகளை வழங்கி வருகின்றது.

தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்த மயமாக்கல், மேலதிக இராணுவ முகாம்கள் ஆகியவற்றுக்கான செலவுகள் எங்கிருந்து எந்த அடிப்படையில் பெறப்படுகின்ற என்ற கேள்விகள் எதனையும் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்தாக இல்லை. இந்த நிதியுதவிகள் இலங்கை தனித்த 'ஒற்றையாட்சி அரசு'என்ற கட்டமைப்பையும் உறுதிப்படுத்துகிறது. இதை மையமாகக் கொண்டே சரத்வீரசேகர, விதுர விக்கிரமநாயக்க போன்றோர் இலங்கை பௌத்த நாடு என்று துணிவுடன் சித்திரிக்கின்றனர்.

இந்தியா கூட இலங்கையிடம் எதுவுமே கேட்காது என்ற தொனி

## இஸ்ரேல் முறையிலான குடியேற்றங்களை 2015 இல் சட்டரீதியாக்கிய மைத்திரி - ரணில் அரசு

யில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயரத்ன கொழும்பின் புறநகர்ப் பகுதியான பியகம பிரதேசத்தில் சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் பேசியிருக்கிறார். இந்த நிலையில் எதிர்வரும் ஜூலை 20 - 30 ஆம் திகதிகளுக்கிடையில் ரணில் இந்தியா செல்வார் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன. ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ரணில் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதலாவது அதிகாரபூர்வமான பயணம் இதுவாகும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் , இந்தியத் தேசிய பாதுகாப்புச் செயலாளர் . இந்திய முதலீட்டாளர்களையும் ரணில் சந்திக்கவுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

அதேநேரம் வடக்கு- கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள இயற்கைத் துறைமுகங்கள் மற்றும் நிலங்களை அபிவிருத்திக்கும் தமது புவிசார் அரசியல் பொருளாதார நோக்கிலும் பயன்படுத்தவுள்ள புதிய திட்டங்கள் பற்றியும் இந்திய மத்திய அரசு இலங்கையிடம் இருந்து வாக்குறுதியைப் பெற்றிருக்கிறது. இந்தப் பின்னணியிலேயே ரணில், புதுடில்லிக்குச் செல்கிறாரென கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவுக்கு எதிரான போட்டியில் அமெரிக்கா இந்தியாவைத் தன்னுடன் இணைத்துக் கொள்ள எடுத்துள்ள அத்தனை முயற்சிகளும் பயனளிக்கவில்லை. இந்த நிலையில், பாகிஸ்தானுடன் தனது உறவைப் பலப்படுத்தி வரும் அமெரிக்கா, இலங்கை விவகாரத்தில் குறிப்பாக ஈழத்தமிழர்களுக்குரிய நிரந்தர அரசியல் [illegible] பற்றிய விடயத்தில் இந்தியாவைக் கடந்து [illegible] வாய்ப்புகள் இல்லை. இது குறித்து இந்தப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவுக்கு இலங்கையில் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் திட்டங்களை நிறுத்துவதற்கான அழுத்தங்களை இந்தியாவினூடாக சிங்களத்தலைவர்களிடம் உண்டாக்க முடியும் என்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு உண்டு. ஆனால் சர்வதேசப் போர்க் குற்ற விசாரணை அல்லது இன அழிப்பு விசாரணை அவசியம் என்ற தமிழ்த்தரப்பின் கோரிக்கைகளை அமெரிக்கா பரிசீலிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாமலும் இல்லை.

இருந்தாலும் அதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவோ, உரிய ஆதாரங்களை முன்வைக்கவோ தமிழ்த்தேசியக் கட்சிகள் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. அதுவும் குறிப்பிட்ட சில தமிழ்த்தேசியக் கட்சிகள் இலங்கை அரசாங்கத்துடனும் இந்திய மத்திய அரசுடனும் சேர்ந்து பயணிக்கும் அல்லது இந்தியா சொல்வதைக் கேட்கும் நிலையில்தான் இயங்குகின்றன.

இந்த நிலையில் புவிசார் அரசியல், பொருளாதாரப் போட்டிச் சூழல் ஈழத்தமிழர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கினாலும், ஒருமித்த குரலில் அதனை முன்கொண்டு செல்லக்கூடிய அளவுக்கு தமிழர் தரப்பால் உரிய பொறிமுறைகள் வகுக்கப்படவில்லை.

ஆங்காங்கே சிறு குறிப்புகள் அல்லது ஆவணங்கள் இருந்தாலும் அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் , கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒருமித்த குரலில் அதனை ஏற்கும் மனப்பக்குவத்துடன் இருப்பதாகவும் கூறமுடியாது.

தமிழ்த்தரப்பின் இந்தப் பலவீனங்களை அறிந்துகொண்ட நிலையில்தான் இந்தியா, ரணிலுடன் குறிப்பாகச் சிங்கள அரசியல் தலைவர்களுடன் முரண்பாடுகளிலும் உடன்படக்கூடிய புவிசார் அரசியல் பொருளாதார நலன்களில் கவனம் செலுத்துகிறது. இதற்கு அமெரிக்காவும் விதிவிலக்கல்ல.

ரஷ்ய உக்ரைன் போர்ச் சூழலில், அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் ஒத்துழைப்புடன் பலஸ்தீன நிலங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்து வரும் நிலையிலும், சர்வதேசத்தை நோக்கிய தமது அரசியல் விடுதலைக்குரிய வழிவரைபடத்துடன் நிதானமாகவும் ஒருமித்த குரலோடும் பலஸ்தீன ஹமாஸ் இயக்கம் செயற்படுகின்றது.

இதனால் விரும்பியோ விரும்பாமலோ காலம் தாழ்த்தியேனும் பலஸ்தீனர்களின் கோரிக்கை சர்வதேச அரங்கில் நிறைவேறக்கூடிய வாய்ப்புகள் விஞ்சிக் காணப்படுகின்றன.

இவ்வாறான சூழல் அல்லது பின்னணி ஒன்றைத் தமிழ்த்தரப்பினர் எந்த வகையில் உருவாக்கவுள்ளனர்? அதனைக் கையாளக்கூடிய தகுதி யாரிடம் உண்டு? சிங்கள அரசியல் தலைவர்கள் போன்று சர்வதேச அரசியல் விவகாரங்களை, குறிப்பாக இந்திய அரசியல் நகர்வுகளை அவதானித்துச் செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கட்சி எது?

தேர்தல் அரசியல் முறைமைக்குள் சிக்குண்டதால், இலங்கையின் ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் தமது கட்சி ஆசனங்களை அதிகரிப்பதிலும் வாக்குகளைப் பெறும் நோக்கில் வியூகங்கள் வகுப்பதிலுமே தமிழ்க்கட்சிகளின் காலம் கரைகிறது.

கட்சி வளர்ச்சிக்குத் தேவையான வியூகங்களுக்குள் , மக்களைக் கவரும் நோக்கில், இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு எதிரான பரபரப்புப் போராட்டங்களுக்குரிய அரசியல் வேலைத் திட்டங்களையே வடக்கு - கிழக்கில் காண முடிகிறது. நிவாரணம் வழங்கும் அரசியலுக்கும் குறைவில்லை. தமிழ்த்தேசியக் கொள்கை மக்களிடம் இறுக்கமான நிலையில் உள்ளது. ஆகவே பலஸ்தீனம் போன்று மக்களிடம் இருந்து வழி முறைகளையும் செயற்பாட்டுத் திட்டங்களையும் பெற முடியும். அதற்குரிய விழிப்புணர்வையும் வழங்க முடியும்.




# உடுக்கு



உடுக்கு என்பது தமிழர் பாரம்பரிய இசைக் கருவிகளில் ஒன்றாகும். கிராமப்புற கோயில்களிலும் சமயச் சடங்கு களிலும் இது ஒலிக்கப்பெறும். தோல் இசைக்கருவியான இதைக் கைகளைக் கொண்டு இசைக்கலாம். இசைத்துக் கொண்டிருக்கும் போதே இதன் சுருதியை மாற்றியமைக் கக்கூடியதாக இருப்பது இதன் சிறப்பியல்பாகும்.

உலோகத்தால் அல்லது மரத்தாற் செய்யப்பட்ட இரு பக்கங்களும் விரிந்து இடை சிறுத்துப் பருத்திருப்பதால் இதை "இடை சுருங்கு பறை" என்றும் துடி என்றும் அழைப்பர்.

பொதுவாக இதிலிருந்து ஒலியெழுப்புதலை "உடுக்குத் தெறித்தல்" என்றே அழைக்கப்படுகின்றது.

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவன் கையிலும் இந்த உடுக்கு காணப்பெறுகிறது. இதிலிருந்து இது ஒரு பழமைவாய்ந்த இசைக்கருவியென்பது புலனாகிறது.

# My Garden



- I have a beautiful garden
- My garden has many trees and plants
- There is a birdbath in my garden
- It has many flowers and vegetables
- lots of bufferflies and birds come to my garden
- I visit my garden every evening
- I keep my garden clean
- We can get fruits and vegetable
- my garden is green
- I like my garden

I.akshaya
Grade 03
Kn/tharumapuram no.1g.t.m school



கு.ஆத்மிகா
தரம்- 6
யா/ புனித தெரேசாள்
மகளிர் கல்லூரி.



அ.ஜெகானா
செனூரி
தரம்- 3

# தடைகளை கண்டு துவளதீர்கள்



வாழ்க்கை என்னும் பாதையில் பெரிய குழியில் தடுக்கி விழுந்தாலும் "இத்தோடு நம் கதை முடிந்தது" என்று கருதாமல், குழியில் இருந்து மேலே வருவது எப்படி என்று எண்ண வேண்டும். இடையூறுகள், துன்பதுயரங்கள் போன்றவை எல்லா மனித வாழ்விலும் வருவது இயல்பானதுதான். ஆனால், சிலர் அதிலேயே துவண்டு வாடிவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தோல்வியைத் தழுவுவது தவிர்க்கமுடியாதது.

ஆனால், வெற்றியாளர்கள் எத்தகைய இக்கட்டான சூழலையும் கடந்து போய்விடுகிறார்கள். எதையாவது சாதிக்கும் முயற்சியில் இறங்கினால், தடைகள் குறுக்கிடத்தான் செய்யும். அந்தத் தடைகள் நம் பயணத்தை நிறுத்திவிடக்கூடாது. எந்தவொரு வெற்றியும் எடுத்த எடுப்பிலேயே கிடைத்துவிடுவதில்லை. அடுத்த அடியை எப்படி, எவ்வளவு அழுத்தத்தோடு எடுத்து வைக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்க அத்தகைய தடைகள் கூட நமக்கு தேவைதான் மனவுறுதியுடன் சிகரத்தினை நோக்கி சலிப்பின்றிப் பயணம் செய்யுங்கள். தடைகளுக்கு அஞ்சாதீர்கள். அவற்றை வரவேற்று கொண்டாடுங்கள். ஏனெனில், தடைகள் தான் உங்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும். நெருக்கடியான காலகட்டம் தான் மிகச் சிறந்த மனிதனை அடையாளம் காட்டுகின்றன...!!

**கிஷானி பாலசுப்பிரமணியம்,**
கல்வயல்
சாவகச்சேரி


# மாணவர்களே!




நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555


சு.மதுசாஜினி
தரம் - 9 D
வவு/விபுலானந்தக் கல்லூரி.



மதியரசன்,
தரம்- 11
யா/ அச்சுவேலி
மத்திய கல்லூரி.





ஜெ. அபிசா
தரம் - 3
மு/பாண்டியன்குளம்
ஆரம்ப பாடசாலை



க. கனிமொழி
தரம் 10
யா/மகாஜனக் கல்லூரி



பு. ஜீவேந்திரன்
தரம்- 08
யா/ இந்துக் கல்லூரி



ச.ஆருஷன்
தரம் - 4
யா/ செட்டித்தெரு
மெ.மி.த.க.பாடசாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
18 ஜூன் 2023

# ரணில் ஏற்கும் நடிபாகங்கள் தமிழர் உடைந்துதிர்வதா?

குருமன்காட்டாள் வன்னிகா



மாகாணசபைத் தேர்தல் இப்போதைக்கு நடைபெறாது என்றும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகளுடன் கடந்த 6 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பில் தெரிவித்துள்ளார். பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையைப் பிணை எடுக்கமுயலும் இந்திய ஆட்சியாளர்கள் உள்ளிட்ட சர்வதேச அரசாங்கங்கள் மாகாணசபைத்தேர்தலை விரைவில் நடத்தும்படி கோருகின்றன. ஆனால் அதை நடத்தும் விருப்பம் ரணிலுக்கு இல்லை. ஏற்கனவே உள்ளூராட்சித் தேர்தல் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளது. இந்தியாவையும் ஏனைய சர்வதேச சக்திகளையும் பொறுத்தவரை சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் யார் பக்கம் என்பதை அறிய அவர்களுக்கு ஒரு தேர்தல் தேவை.

அதேவேளை அது மாகாணசபைத்தேர்தலாக அமைந்தால் இலங்கைத் தமிழரையும் திருப்திப்படுத்திய பெருமையும் தமக்காகும் என அந்தச்சக்திகள் உணர்கின்றன.

மக்கள் உண்மையில் ஆதரிக்கும் தரப்புடன் இரு தரப்பு, பல்தரப்பு இராஜதந்திர உறவுகளையும் பொருளாதார உடன்பாடுகளையும் மேற்கொள்வதே தமது நலன்களை உறுதிப்படுத்தப் பெரிதும் உதவும் என அந்தச் சக்திகள் உறுதியாக நம்புகின்றன,

ஆனால் உள நாட்டின் நிலைமை , ஜனாதிபதித் தேர்தலை நோக்கிய திசையிலேயே நகருமா அல்லது நாடாளுமன்றத் தேர்தலை நோக்கி நகருமா என்பது பற்றி தெளிவான முடிவு வர இன்னும் காலம் எடுக்கும். அதற்காகத் தன்னை ஒரு 'கதாநாயகராக' மாற்றும் விம்பத்தைக் கட்டியெழுப்ப முனைகிறார் ரணில். அத்துடன் பொதுஜன பெரமுன உட்பட சகல கட்சிகளினதும் அங்கத்தவர்களையும் வாக்காளர்களையும் அணைக்கவும் முயற்சிக்கிறார். இலங்கை மக்களைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து முழுவதுமாக மீட்காவிட்டாலும் ஆகக்குறைந்தது எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கு மக்கள் வரிசையில் காத்துக் கிடக்கும் நிலையாவது நிறுத்தப்பட்டுள்ளது எனும் தேர்தல் பிரசார ஆயுதம் அவரிடம் இப்பொழுது உள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டின்படி சர்வதேசக் கடன் மறுசீரமைப்பு, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஆகிய விடயங்களை ஒப்பேற்றுவதில் இன்னமும் இலங்கை அரசாங்கம் சவால்களையே சந்திக்கிறது.

அதில் வெற்றியடையாவிட்டால் எல்லாமே பழையபடி பின்னோக்கிச் சென்றுவிடும்.

அந்தச் சவால்களைவிட, மொட்டுக் கட்சியில் மஹிந்த குடும்பமும் அதன் ஆதரவாளர்களும் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி ஆகிய மூன்று தரப்புக்களின் அரசியல் எதிர்ப்பை ரணில் எதிர்கொண்டுள்ளார்.

இதில் என்ன சிக்கல் என்றால், சிங்கள வாக்காளர்கள் மத்தியில், தான் சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் வாக்காளர்களால் வெறுக்கப்படும் ஒருவராகவும் அதேவேளை சிறுபான்மை மக்கள் மத்தியில் வாக்குகளைக் கவர்வதற்காக அந்த மக்களின் சில மேலோட்டமான அபிலாசைகளையாவது நிறைவேற்ற முயல்வதாகவும் எதிரும் புதிருமான இரட்டைவேடத்தை ரணில் போட வேண்டிய நிலைமையில் உள்ளமை தான். நாட்டின் விநோதமான இந்த உள்நாட்டுச் சூழலில் , வெளிநாட்டு ராஜதந்திரச் சூழலைப் பார்த்தால், இலங்கையில் சீன நலன்களுக்கெதிராக தமது நலன்களை நிறுவிக்கொள்ள முயலும் இந்திய - அமெரிக்கக் கூட்டாளிகளின் முயற்சிகளுக்கு உள்நாட்டு வளங்களைப் பகிர்ந்து, சமரசங்களையும் உடன்பாடுகளையும் எட்டுவதும் ரணிலுக்கு பெரும் இராஜதந்திரச் சவால்களாகும்.

ரணிலின் 'பொருளாதார மீட்புப் பயணத்தில்' வெளிநாட்டு முதலீடுகளுக்காக உள்நாட்டு வளங்களை இவ்வாறு பகிர்வது தவிர்க்கமுடியாதது வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதில், இலங்கையின் நலன்களை எதிர் எதிர் நிலைகளில் நின்று பார்க்கும் வல்லரசுகள் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளன.

ரஷ்யாவுக்கு உக்ரைன் சவாலாக மாறியளவுக்கு இலங்கை இந்தியாவுக்கு சவாலாக இருக்காது என்றாலும் இலங்கையில் சீனா காலூன்ற முனைவதாகவே 'இந்திய ராஜதந்திரம்' தொடர்ந்தும் கவலை கொண்டுள்ளது என்பதை இந்திய ஊடகங்களை அவதானிப்போர் புரிந்து கொள்வர். ஆகமொத்தத்தில் ரணில் உள்நாட்டுச் சூழலிலும் சர்வதேச அரங்கிலும் அரசியல் இராஜதந்திர அடிப்படையிலும் இலங்கையின் பொருளாதார மீட்பு நடவடிக்கைகளிலும் 'பல வேடங்களில் நடிபாகம்'பெற வேண்டியவராகவுள்ளார். இலங்கையின் வரலாற்றில் பதவி வகித்த எந்தவொரு ஜனாதிபதியும் சந்தித்திராத சவால்களை இப்பொழுது எதிர்கொள்கிறார் ரணில்!

இந்தச்சூழலைவெறும் அரசியல் இலாபங்களுக்காக தென்னிலங்கையின் சில சிங்கள அரசியல் கட்சிகளும் சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகளும் , மதரீதியான இனரீதியான கொந்தளிப்பைத் தூண்டுவதன் மூலம் பயன்படுத்த முற்பட்டால் அது அந்தச்சக்திகளுக்கும் பொருளாதார நெருக்கடியால் நொந்து வெந்துள்ள இலங்கையின் சகல மக்களுக்கும் ஜனநாயக அரசியலுக்கும்'நிரந்தரத் தற்கொலை' போலாகிவிடும்.

1983 ஜூலைக் கலவரம்,பேரழிவுகளுடன் தொடர்ந்த உள்நாட்டுப் போர், முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் நடந்தவிதம், ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதல் முதலிய பெரும்'சாபக்கேடுகள்' இன்னும் எம்மைவிட்டகலாமல், அதனுடன் பெரும் பொருளாதார நெருக்கடியும், சர்வதேச வல்லரசுகளின் நலனகளை நிறுவும் போட்டாபோட்டியும் இலங்கையைப் பிணித்துள்ள இன்றைய சூழலில், சுயலாப அரசியலுக்காக மதக் கொந்தளிப்புக்கள், இனக் கொந்தளிப்புக்கள் தூண்டப்படுதல் மிகவும் சிக்கலானதும் அபாயமானதுமாகும். இதில் தமிழ் அரசியல் தலைமைகள் மிகவும் 'நிதானமனதுடன்' அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பொதுவான வாழ்வுரிமையைக் காப்பாற்றும் வகையில் தென்னிலங்கை அரசியல் சக்திகளும் நிதானத்துடன் செயற்பட வேண்டிய காலகட்டம் இதுவாகும். தவறும் பட்சத்தில் அது சமூகத் தற்கொலைக்குச்சமமானதாகும். இத்தகைய ஒரு சூழலில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் பிராந்திய அரசியல் கட்சிகளும், சமூக - பொருளாதார நிறுவனங்களும் பிரிந்து உதிர்ந்து தூர்ந்து போகாமல் ஐக்கியத்துடன் ஒற்றுமைப்படுவதும் உபாயங்களை வகுப்பதும் மிக மிக அவசியம்...வரலாற்றுத் தாய் மீண்டும் மீண்டும் சந்தர்ப்பங்களையும் பாடங்களையும் தருகிறாள் !

இப்பொழுது சமகாலத்தில் எமது பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்கு, சமூக ஒழுங்கு சீர்குலைவு, போதைவஸ்துப் பாவனையும் அதன் அழிவுகரமான விளைவுகளும் சுகாதாரம்போசாக்கு பாதிப்பு, சுற்றுச் சூழல் பாதிப்பு, கல்வித் துறை வீழ்ச்சி, தமிழ் மக்களுக்குள்ளேயே வளங்கள் நீதியாகப் பகிரப்படாமை, பாரபட்சங்களும் சமத்துவமின்மைகளும் அதிகரித்தல், ஊழல் மோசடிகள் முதலியவற்றை மாகாண ஆளுநர் உள்ளிட்ட வெறும் அரசாங்க அதிகாரிகள் கவனித்துக்கொள்வார்கள் என்று தமிழ்க்கட்சிகளும், அவற்றின் மூத்த தலைவர்களும் நம்பக் கூடாது. கடந்த காலங்களில் சீரழிவு சக்திகள் தங்கள் "திருவிளையாடல்களை" அரங்கேற்றியதை மறக்கக்கூடாது.

'மூல உபாய அரசியல்' செய்ய முனைவதுடன் சமகாலத்தில் எமது பிராந்தியத்தின் நிர்வாக இயந்திரத்தை அரசியல் சமூக பொருளாதார விழிப்புள்ள தூர நோக்குள்ள பிராந்தியத்துக்குரிய தலைவர்கள் பொருத்தமான யுக்திகளுக்கூடாக பொறுப்பெடுக்கவேண்டும். இடைக்கால நிர்வாகம் சாத்தியமா? சட்டரீதியாக அரசியல் ரீதியாக அதன் சாதக பாதகங்கள் யாவை? இவை பற்றி உரிய விவாதங்கள் அவசியம். ஆனால் மாகாணசபைத் தேர்தலை நடத்த வலியுறுத்துவது அதைவிட மிக அவசியம். நாடு தழுவிய அரசியல், பொருளாதார விடயங்களில் அக்கறை செலுத்தும் எமது தமிழ்க்கட்சிகள், எமது மாகாணங்களின் நிர்வாகிகளின் போக்குப்பற்றியும் அதனால் எமது சமூகம் சந்திக்கும் பாதிப்புகள் குறித்தும் உடனுக்குடன் கவனிக்கவேண்டும். நீண்ட காலத்துக்கு "வெறும் அதிகாரிகள் ஆட்சி" எங்கள் மாகாணங்களில் தொடர்வது நல்லதல்ல. தேர்தலும் ஜனநாயகமும் அவசியமானவை.

உனது முற்றத்தை காப்பாற்றாமல் ஊரைக் காப்பாற்ற முடியாது. ஊரைக் காப்பாற்றாமல் நாட்டைக் காப்பாற்றமுடியாது. '




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org